விலை ரூபா: 08.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (24.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 156

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## மோட்டார் சைக்கிள் மோதி மூன்று வயதுப் பாலகன் பலி

### பருத்தித்துறையில் துயரச் சம்பவம்

(துன்னாலை)

வீட்டிலிருந்து வீதிக்கு வந்த மூன்று வயதுக் குழந்தை மோட்டார் சைக்கிள் மோதியதில் ஸ்தலத்தில் பலியானது.

இத்துயரச் சம்பவம் நேற்றுக்காலை 9 மணியளவில் பருத்தித்துறை கல்லூரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சத்தியகுமார் கிஷாந் (வயது 3) என்ற குழந்தையே சம்பவத்தில் பலியானதாகும்.

வீதிக்கு வந்த குழந்தையை மோதிய மோட்டார் சைக்கிள் அவ்விடத்தில் நிற்காமல் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குழந்தையின் சடலம் விசாரணையின் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

தப்பியோடிய மோட்டார் சைக்கிளைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(ந-101,35)

## வெசாக் நிகழ்வுகளை புறக்கணிப்போம்

### தமிழ்த் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவிப்பு

சிறிலங்கா சிங்களப் பேரினவாதம் பண்பாட்டு ஆக்கிரமிப்பின் மூலமாக தனக்குத் துதிபாடும், வாலாட்டும் ஒரு சமூகமாகத் தமிழ்த் தேசிய இனத்தை மாற்றுவதற்காக படாதபாடுபடுகின்றது.

தனது இன அடையாளத்தை இழப்பவன் தன்னையே விலைக்கு விற்ற கேவலமானவனாகவே கருதப்படுகின்றான். இதற்கு தமிழ்த் தேசியஇனம் தயாராகவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் எப்போதுமே பண்பாட்டு ஆக்கிரமிப்பைச் செய்வதன்மூலம் ஒரு இனத்தின் அடையாளத்தைச் சிதைத்து விடுவர். இதனைச் சிங்களப் பேரினவாதம் தமிழீழப் பகுதிகளில் முனைப்பாக முன்னெடுக்கின்றது.

இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் நிகழ்வுகளைப் புறக்கணிப்போம். வெசாக் நிகழ்வுகளின் பின்னணியில் சிங்களப் பேரினவாதம் என்ற தலைப்பில், பிரஸ்தாப தொழிற்சங்கம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்பேசும் மக்களது தாயகத்து நிலத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை அங்கீகரித்துவிட்டோம்

## ஜே.வி.பி குழம்புவதில் அர்த்தமில்லை; பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**யுத்தநிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திட்டபோதே விடுதலைப் புலிகளை நாம் அங்கீகரித்துவிட்டோம். இதனால் ஜே.வி.பி இதில் அச்சப்பட ஏதுமில்லை. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக நிவாரணப் பணிகள் சென்றடையவேண்டும் என்பதற்காகத்தான் பொதுக்கட்டமைப்பு. இதில் யாரும் கவலைப்பட எதுவுமில்லை.**

**இவ்வாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த விசேட பேட்டியில் கூறியுள்ளார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியின் போக்கை மையமாகக்கொண்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்கப்பட்டபோது அவர் அளித்த பதில் வருமாறு,**

ஆளும் கூட்டணி அரசின் முதன்மைக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியுடன் ஆலோசனை நடத்தி ஆத[illegible]கவைக்கவேண்டும் என்பதற்கான முழுமுயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம்.

ஆளும் அரசின் கூட்டணிக்கட்சியாக ஜே.வி.பி இருந்தாலும் அதற்கென தனியான முடிவெடுக்கும் சுதந்திரம் உள்ளது. ஜனாதிபதியின் அண்மைய உரை குறித்தும் அது தனது கருத்தைத் தெரிவிக்க அதற்கு உரிமை உண்டென்றே நான் அதைப் பார்க்கிறேன்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. இதனால் ஜே.வி.பி அரசிலிருந்து வெளியேறும் என்று கூறப்படுவதை நான் பிரதானமாகக் கருதவில்லை. சில நேரங்களில் அப்படியான அச்சுறுத்தல்களை அது விடுத்திருந்தது. இருந்தபோதும் ஆளும் அரசில் தொடர்ந்து ஜே.வி.பி அங்கம் வகித்துவருகிறது. கடந்த தேர்தலில் மக்கள் அளித்திருக்கும் ஆணையைப் பெற்றே ஜே.வி.பி அரசில் அங்கம் வகித்திருக்கிறது.

பொதுக்கட்டமைப்பை அந்தக் கட்சி எதிர்த்தாலும் ஆட்சியிலிருந்து வெளியேறுமென நான் கருதவில்லை. அப்படி ஜே.வி.பி வெளியேறினால் நிச்சயம் ஆட்சி கவிழ்ந்துவிடும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு சிறுபான்மை அரசாகிவிடும். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியமைக்க அழைப்பதுதான் சரியானதாகவிருக்கும்.

மக்களுக்கு நன்மை செய்யவே எமக்குத் தேர்தலில் அவர்கள் ஆணைவழங்கியிருக்கிறார்கள். இப்படியான நிலையில் ஜே.வி.பி ஆட்சியிலிருந்து வெளியேறுமென நான் எண்ணவில்லை. ஜே.வி.பிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் இடையே நல்லுறவை வளர்க்க ஆக்கபூர்வமான பேச்சுகள் நடத்தப்பட்டுவருகின்றன.

### தேசிய அரசு

தேசிய அரசு அமைப்பதை நான் எதிர்க்கிறேன். தேசிய அரசு அமைவதன் மூலம் உண்மையான ஜனநாயகத்தை நாம் செயற்படுத்தமுடியாது. நாங்கள் பிரச்சினைகளிலிருந்து ஒருபோதும் விலகிச்செல்லவில்லை. பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தே வந்திருக்கிறோம். தேசிய அரசு அமைந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் நேற்று குண்டுவெடிப்பு சேதங்கள் இல்லை; கடைகள் திறப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் கரையோரப் பகுதிகளான கிருஷ்ணபுரி மற்றும் திருக் கடலூர் கிராமங்களில் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியிலிருந்து நேற்று அதி காலை 1.30 மணிவரை 8 குண்டுகள் வெடித்துள்ளன.

இதனால் நகரிலும், புறநகர்ப் பகுதிக ளிலும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. எனினும் இக்குண்டுவெடிப்புக்களினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை இக்குண்டுவெடிப்புச் சம்ப வங்கள் தொடர்பாக ஏழு தமிழ் இளைஞர் கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். நேற்றுக்காலை இவர்கள் ஏழுபேரும் திரு கோணமலை மாவட்ட நீதிவான் மாணிக்க வாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

நீதிவான் அவர்களை சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இதேவேளை, நேற்றுக்காலை விடுமுறை நாளான போதும் நகரிலுள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. இவர்கள் தமக்கான உணவுப் பண்டங் களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டி ருந்தனர்.

நண்பகலுக்குப் பின்னர் நகரில் சனக் கூட்டம் மிகவும் குறைவாகவே காணப்பட் டது. நகரின் பிரதான பகுதிகளில் பொலி ஸாரும், இராணுவத்தினரும் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே நேற்றைய தினம் பாலக் கோட்டாறு பத்தினியம்மன் ஆலயப் பொங் கல் விழாவும், பௌத்தர்களின் வெசாக் தினக் கொண்டாட்டமும் இடம்பெற்றபோதும் குறைந்தளவிலானோரே இந்த விழாக்களில் கலந்துகொண்டனர். (ந-4)

# அழுகிய நிலையில் அம்பாறையில் சடலம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந் துறை மாவடிப் பள்ளிப்பாலத்தின் கீழ் ஆணின் சடலமொன்று நேற்று முன்தின மிரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைகள் இரண்டும் பின்னால் கட்டப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் சுமுகநிலை ஏற்பட ஆளுநர் தலைமையில் கூட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைகுறித்து சுமுகமான முடிவுகளை எடுப்பதற்காக நாளை 25 ஆம் திகதி வடக்குக் கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சர்வமதத் தலைவர் கள் மற்றும் தமிழ்மக்கள் பேரவையினர் வடக்குக் கிழக்கின் சிங்கள அமைப்புக் களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ள னர்.

இதேவேளை இக்கூட்டத்தில் கலந்து கொள்வதில்லையென வடக்குக் கிழக்கின் சிங்கள அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ந-4)

EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசாங்கத்தை விட்டு வெளியேற முடிவெடுத்தால் ஜே.வி.பியினரை ஜனாதிபதி கைதுசெய்யத்திட்டம்

(கொழும்பு)

**ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான உட்கட்சிப் பூசல் உச்சத்திலிருக்கும் நிலையில் அரசிலிருந்து ஜே.வி.பி. எந்நேரமும் வெளியேறலாம் என்ற நிலைமை தற்போது அதிகரித்துக் காணப்படுகிறது. ஆனால் அவ்வாறு அரசைவிட்டு வெளியேறினால் ஜே.வி.பி உறுப்பினர்கள் பத்துப்பேரைக் கைதுசெய்வதற்கு ஜனாதிபதி வியூகம் வகுத்திருக்கிறார் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

கடந்த திங்கட்கிழமை ரூபவாஹினியில் உரையாற்றிய ஜனாதிபதி நாட்டு நிலைமை பற்றி மக்களுக்கு விளக்கம் என்ற பெயரில் தமது கட்சியைப் படுபயங்கரமாக சாடியதால் ஜே.வி.பி உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதி மேல் சீற்ற மடைந்துள்ளனர்.

செவ்வியை கேட்டவுடன் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, அமைச்சர் மங்கள சமரவீரவைத் தொடர்புகொண்டு ஜே.வி.பியின் மத்திய குழு நாளை கூடுகிறது என்றும்,

ஜனாதிபதியின் இன்றைய பேட்டி குறித்து அதில் பாரதூரமான முடிவுகளை நாம் எடுக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார். மத்திய குழுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் விமல் வீரவன்சவுக்குத் தொலைபேசி மூலம் ஒரு முக்கிய அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

அதாவது, ஜே.வி.பி. உறுப்பினர்களின் கடந்த ஆறுமாத காலச் செயற்பாடுகள் குறித்து சுமார் 35 ஆவணங்கள் பொலிஸாரால் ஜனாதிபதியின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும்,

ஜே.வி.பி. அரசை விட்டு வெளியேற முடிவெடுத்தால். இந்த ஆவணங்களின் அடிப்படையில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் சுமார் 10 பேரைக் கைது செய்யவும் வியூகம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் வீரவன்ச தொடர்புகொண்ட பொலிஸ் மேலதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பியினருக்கு இந்த அறிவிப்பு ஜனாதிபதியின் உத்தியோக பூர்வமற்ற உத்தரவு மூலமே தெரியப்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தத்தகவலை அடுத்து கட்சித் தலைவர் சோமவன்ச அமரசிங்க, ரில்வின் சில்வா ஆகியோருடன் விமல வீரவன்ச கலந்தாலோசனை செய்தார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பில் உண்மை இருக்கிறது.

எஸ்.பி.திஸநாயக்கவின் கைதுக்குப் பின்னர் ஜனாதிபதியின் இத்தகைய முடிவுகளுக்குரிய சாதகத் தன்மைகளை நாம் புறந்தள்ளிவிட முடியாது என்று மூவரும் பேசிக்கொண்டனர்.

அரசை விட்டு வெளியேறினால் ஜனாதிபதியின் தற்போதைய திட்டத்தின்படி 24 மணி நேரத்தில் எமது தலைவர் சோமவன்ச அமரசிங்க கைது செய்யப்படுவார்.

ஆகவே எமது கட்சியையோ எங்களையோ ஜனாதிபதி எவ்வளவு வேண்டுமானாலும் தூற்றட்டும். வசைபாடட்டும். நாங்களும் திருப்பித் தூற்றுவோம் என்று ரில்வின் சில்வா ஆலோசனை தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பேட்டியை ஏனைய தொலைக்காட்சிகள் தொடர்ந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. அதனால் எமக்குப் பிரச்சினை இல்லை.

ஜனாதிபதியின் கௌரவம் தான் பாதிக்கப்படுகிறது என்று அங்கு சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

இதை அடுத்து தமது நிலைப்பாட்டில் சற்று நெகிழ்ச்சிப்போக்கைக் காண்பிக்க முடிவெடுத்த ஜே.வி.பி உறுப்பினர்கள் ஜனாதிபதியை அவரது விருப்பத்தின் படி செய்ய விட்டுவிட்டு அவரது பாதையிலேயே சென்று எமது வேலைகளை செய்ய வேண்டும் என்று தீர்மானித்துள்ளனர். (க-4)

## ஜே.வி.பியினரை வெளிப்படையாகத் தாக்க ஜனாதிபதிக்குக் கிடைத்த ஓர் சந்தர்ப்பம்

(கொழும்பு)

ஜே.வி.பியின் நடவடிக்கைகளால் கடும் சீற்றமடைந்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அக் கட்சியினரை வெளிப்படையாகத் தாக்குவதற்கே கடந்த திங்கட்கிழமை அரச தொலைக்காட்சியில் தோன்றி பேட்டியளித்தார் என்று வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரூபவாஹினியில் தனது விசேட பேட்டியை ஒளிபரப்புவதற்காக கடந்த திங்கட்கிழமை லேக் ஹவுஸ் பணிப்பாளர் ஜனதாஸ பீரிஸை ஜனாதிபதி தனது மாளிகைக்கு அழைத்திருந்தார். இப்படியான விசேட பேட்டிக்கு ஊடகத்துறை அமைச்சரையும் கூடவே பேட்டி நடைபெறும் இடத்துக்கு ஜனாதிபதி அழைப்பது வழக்கம். ஆனால் அன்றைய தினம் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை ஜனாதிபதி அழைக்கவில்லை.

ஜே.வி.பியினரை கூட்டணியை விட்டு விலத்திவிடக் கூடாது என்ற முழுமுயற்சியுடன் அக் கட்சிக்கு சார்பாக ஜனாதிபதியுடன் பரிந்து பேசி வரும் அமைச்சர் மங்கள சமரவீரவை பேட்டி நடைபெறும் இடத்துக்கு அழைத்தால் தான் பேட்டியில் ஜே.வி.பியை தாக்கி பேச முடியாது என்பதால் பிரதி ஊடக அமைச்சர் டிலான் பெரேராவை மாத்திரம் அன்று ஜனாதிபதி தனது மாளிகைக்கு அழைத்திருந்தார். பேட்டி நடைபெறும் முன்னர் ஜனாதிபதியும் டிலான் பெரேராவும் நீண்டநேரம் கலந்துரையாடினர்.

பேட்டி ஒளிப்பதிவு செய்யப்பட்டது. பேட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஜனாதிபதி ஜே.வி.பியை தாக்குவதற்கென ரூபவாஹினிக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்த மேர்வின் சில்வா டிலான் பெரேராவுடன் கைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஜே.வி.பிக்கு இந்த வைத்தியம் தான் சரி. ஜனாதிபதி நல்லா கொடுக் கட்டும்? என்று ஆசீர்வதித்திருக்கிறார்.

பேட்டி முடிந்தது. அதில் ஜே.வி.பியை ஜனாதிபதி படுபயங்கரமாக தாக்கி அக்கட்சியை இரண்டிலொரு முடிவெடுக்கும் நிலைக்கு ஆளாக்கியிருந்தார்.

பேட்டியின் பின்னர் ரூபவாஹினிப் பணிப்பாளர் நிசாந்த ரணதுங்கவை அழைத்த ஜனாதிபதி பேட்டியின் ஒரு சொல்லில்கூட கை வைக்க வேண்டாம். அப்படியே ஒளிபரப்பட வேண்டும். அததுடன்இன்று மாலை வரை பேட்டி விடயங்கள் யாருக்கும்தெரியக்கூடாது.

இரகசியமாகப் பேணப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். நிசாந்த ரணதுங்கவும் பேட்டி விடயங்கள் வெளியே கசியாமலிருக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

ஜனாதிபதி தனக்குத் தெரியாமல் ரூபவாஹினிக்கு பேட்டி கொடுத்துவிட்டார் என்பதை சில மணிநேரத்தின் பின்பு அறிந்து கொண்ட அமைச்சர் மங்கள ரூபவாஹினி பணிப்பாளர் நிசாந்தவை தொடர்புகொண்டார்.

ஜனாதிபதி ஏதாவது பேட்டி தந்தாரா? அதில் ஜே.வி.பியினை தாக்கி பேசியிருந்தாரா? என சடசட வென கேள்விகளை அடுக்கிய மங்கள சமரவீரவிடம் பேட்டி தந்த விடயத்தை கூறிய நிசாந்த தனக்கு ஞாபகம் உள்ளவை எனக் கருதிய ஜனாதிபதி கூறிய விடயங்கள் சிலவற்றை அமைச்சரிடம் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் ஜே.வி.பிக்கு எதிரான விடயங்களை நீக்கிவிடும்படி மங்கள சமரவீர கூறினார். ஆனால் நீங்கள் என்னை பதவியிலிருந்து நீக்கினாலும் பரவாயில்லை என்னால் ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட முடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ரூபவாஹினிப் பணிப்பாளர் கூறிவிட்டார்.

உங்களுக்கு விளங்குவதில்லை எமது கூட்டணி அரசையே துண்டாக்கப் போகுது என்று நிசாந்த மீது எரிந்து விழுந்தவாறே ஜனாதிபதியை தொடர்புகொள்ள முயன்றார்.

ஆனால்அன்று முழுவதும்தொடர்பு கொண்டும் அவரால் ஜனாதிபதியை தொலைபேசியில் பிடிக்க முடியாமல் போய்விட்டது.

ஜனாதிபதி தெரிந்தே மங்களவின் அழைப்புகளை நிராகரித்தார் என்று கூறப்படுகிறது. திட்டமிட்டபடி திங்கட்கிழமை மாலை ஜனாதிபதியின் பேட்டி முழுமையாக ரூபவாஹினியில் ஒளிபரப்பானது குறிப்பிடத்தக்கது. (க-4)

## இராசி பலன்

**24.05.2005**
**(வைகாசி 10, செவ்வாய்க்கிழமை)**
**பிரதமை பின்னிரவு 12.27 மணிவரை**
**அனுசம் பிற்பகல் 3.39 மணிவரை**
**இராகுகாலம் 2.52- 4.22 மணிவரை**
**சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பகைவரால் கவலை, காரிய தாமதம், பொருள் விரயம், வாகன பயம். |
| இடபம் | தேக நலன், தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி, தெய்வசிந்தை. |
| மிதுனம் | ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை. |
| கடகம் | அஜீரண ரோகம், மனக்குழப்பம், சொத்துப் பிணக்கு, பண விரயம். |
| சிங்கம் | ரோக நிலை, வீண் விவாதம், வேலைச் சுமை, முயற்சி தாமதம். |
| கன்னி | அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, தொழிலில் ஆர்வம், முயற்சி கைகூடும். |
| துலாம் | மனோ சங்கடம், முயற்சி தாமதம், மரியாதைக் குறைவு, தன விரயம். |
| விருச்சிகம் | குடும்ப சுகம், புதிய முயற்சி, சிந்தனை மிகுதி, தெய்வசிந்தை. |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, வீண்பகை, நித்திரைக் குறைவு. |
| மகரம் | உறவினர் வருகை, சயன சுகம், தொழில் வருமானம், ஆனந்தம். |
| கும்பம் | இஷ்ட சித்தி, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம், பிரபுத்தனம். |
| மீனம் | உத்தியோக பலம், பொருள் விரயம், வீண் பயம், காரிய தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

-வளவன்

## மாவீரர்கள் ஒருபோதும் சாகவில்லை; அவர்கள் சரித்திரமாய் வாழ்பவர்கள் -ஆதீஸ்வரன் மாஸ்ரர்

மாவீரர்கள் சாகவில்லை அவர்கள் சரித்திரமாக வாழ்பவர்கள். அவர்களது தியாகம், எண்ணம், சிந்தனை, செயற்பாடு என்பன தமிழீழ மண்ணை மீட்பதிலேதான் இருக்கிறது என வீரமுனைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வீ.ஆதீஸ்வரன் மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாவீரர் குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு தம்பிலுவில் அரசியல் பணிமனையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தாயின் புனித கருவறையில் விதையாகி என்றோ ஒரு நாள் இந்த மண்ணுக்கு நாம் இரையாகத்தான் போகிறோம். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், உண்டோம், இறந்தோம் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கை அல்ல.

பிறப்பிலிருந்து இறப்புவரை என்னசெய்தோம்? எதைசாதித்தோம்? என்பது தான் முக்கியமானது. இன்று இதுவரை காலமும் எமது உரிமைப்போராட்டத்தில் வித்தாகிப் போன மாவீரர்களின் பெற்றோர்களை நாங்கள் தெய்வங்களாக மதிக்கிறோம். அப்பெற்றோர்களை வீரனைப் பெற்றெடுத்த வீரத்தாயாய் போற்றுகின்றோம். எமது போராட்டம உரிமைப்போராட்டம் அது உணர்வு பூர்வமானது. அற்ப சொற்ப இலாபங்களுக்காக சோரம போகும் போராடடம் எமது போராட்டமல்ல.

இனறு எமது போராட்டத்தின் உச்சப் பலத்தை சிங்கள அரசும் சர்வதேசமும் நன்றாக உணர்ந்துள்ளன. இதுவரை காலமும் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் பின்பு எத்தனை தமிழ் மக்களைப் பலிகொடுத்து விட்டோம். தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் பேசுகின்ற பொது மக்கள் என எத்தனை தமிழ் உறவுகளை இழந்திருக்கின்றோம். இனியும் இப்படி எமது மக்களை நாங்கள் இழந்து கொண்டு போகமுடியாது எனத் தெரிவித்தார். (ற-4)

## கால்நடை மருத்துவர் பற்றாக்குறை நீக்கப்படும்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிலவும் கால்நடை மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கு விவசாய கால் நடை அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒவ்வொரு மருத்துவ நிபுணரை நியமிப்பதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் 8 மாவட்டங்களில், 76 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 37 கால்நடை மருத்துவ நிபுணர்கள் மாத்திரமே கடமையாற்றுகின்றனர்.

எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு 20 பேரை நியமித்தாலும் மேலும் 19 பேர் தேவைப்படுவார்கள் எனத் தெரியவருகின்றது.

எனவே, அரசு இது பற்றியும் கவனத்தில எடுக்க வேண்டும் என வடக்கு- கிழக்கு மாகாண கால்நடைப் பண்ணை விவசாயிகள் கேட்டுள்ளனர். (க)


## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே. உமது திருநாமம் அர்ச்சிப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே. என் வாழ்வில் எச்சந்தர்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

(9565) அடியான்


## உங்கள் வலம்புரியில்

நாளை புதன்கிழமை முதல்

**கலாநிதி செ.திருநாவுக்கரசு**

**(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)**

எழுதும்

**“ஈழத்தின் தேசிய இனப்பிரச்சினைகள்”**

# புனரமைக்க நிதியுண்டு; பணிகளை முன்னெடுக்க

# பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது அவசியம்

## ஐரோ.ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் தேவ ஆதித்யா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையைப் புனரமைப்பதற்கு நிதியுள்ளது. ஆனால் அழிக்கப்பட்ட 1 இலட்சம் வீடுகளைப் புனரமைக்க புதிதாக நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கம் தயாரா? அரசால் முடியுமா? இவ்வாறு இலங்கையில் பிறந்த ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினரான நிரஞ்சன் தேவ ஆதித்யா தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கப் போதிய வளங்கள் இலங்கையில இல்லை என அவர் கூறினார்.

மேலும், 163 மில்லியன் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம உறுதியளித்துள்ளது. உறுதியளிக்கப்பட்ட 363மில்லியன் யூரோககளுக்கு மேலதிகமான தொகை இது. இதனைப்பெற இலங்கை அரசு விரும்பினால் தமக்குத் தேவையான பொருட்களின் பட்டியலையும் தமது திட்டங்களையும் கையளிக்க வேண்டும். இதன்பின்னரே ஐரோப்பிய ஒன்றியம் நிதியை ஒதுக்கமுடியும். இது பொருள் உதவியல்ல நிதி உதவி. ஐரோப்பிய ஒன்றியம் நிதியை அரசாங்கத்திடம் மட்டுமே கையளிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த அவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுக்களை நடாத்தியிருந்தார்.

வீடுகளை அமைக்க நீண்டநாட்களாகும். இதனை எதிர்கொள்ள இலங்கை தயாரா? நிதிவழங்குவது பிரச்சினை அல்ல. இதனை அமுலபடுததும்போது ஏற்படும் மனிதவள பற்றாக்குறையே முக்கிய பிரச்சினை. ஓரிரு வருடங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுகக அரசால்முடியுமா, இதற்கு பொலிஸ் இராணுவம், போரிட்ட முப்படையையே பயன்படுத்தமுடியும் என அவர் கூறினார்.

அல்லாவிடில் இரண்டு இலட்சம் பேர் தேவை. உங்கள் நாட்டை புனரமைக்க விரும்பினால் இப்பணியை நிறுவனங்களிடம் கையளியுங்கள் என்றார்.

ஒருவர் இலங்கையில் வீடுகட்டுவதென்றால் பல்வேறு சட்ட, சட்டரீதியற்ற தடைகள் உள்ளன. வேறு நாடுகளில் இவை கிடையாது. இதனை இலங்கை குறைதது்க்கொள்ள வேண்டும். மாத்தறை, மட்டக்களப்பு நெடுஞ்சாலை அமைக்க ஐரோப்பிய ஆணைக் குழு 92 மில்லியன் யூரோக்களை ஒதுக்கியுள்ளது. இதன் முதற்கட்டப்பகுதிகளுக்கு 45 மில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அடிப்படை இலக்கு பொருளாதாரமே என்றும் அவர் கூறினார்.

இந்நிதிகள் அனைத்தும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான உதவிகளின் கீழேயே உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வுதவிகளை பாதிக்கப்பட்ட சகலருக்கும் எடுத்துச் செல்ல பொதுக்கட்டமைப்பு அவசியம். எமது நிதியை வழங்க உளளூர் அரசியல் கட்டமைப்பை நாம் விரும்பவில்லை. இவ்வாறு தேவ ஆதித்யா மேலும் தெரிவித்தார்.

(ந-6)

## பொது அறிவுத்திறன் போட்டி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுத்திறன் போட்டிகளை நடத்தி வருகின்றது. (க-131)

## மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கை

உள்ளூராட்சி மன்றங்களின் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளிலொன்றாகக் குறிப்பிடப்படும் தெருக்களுக்கும் பொது இடங்களுக்கும் மின்விளக்குகள் பொருத்துவது தொடர்பாக, உத்தேச வேலைத்திட்ட விபரங்களை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இக் கடிதத்தில் திறைசேரி எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு மாற்றுவழியாக இதனாலேற்படும் பராமரிப்பு எரிபொருட் செலவினம் திறைசேரி, உளளூராட்சி மன்றம் மின்சாரசபை, மின்சாரசபை "ஏ" நிறுவனம் என்பவற்றிடம் பங்கிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

# வறிய மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கு

# புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் உதவவேண்டும்

(புங்குடுதீவு)

தமிழர் தாயகத்தில் பெருமளவு மாணவர்கள் வறுமை காரணமாக உயர்கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

இவர்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் உதவ வேண்டும. தமக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியையேனும் இம் மாணவர்களுக்க வழங்கி அவர்கள் கல்வியைத் தொடர உதவ வேண்டும்.

இவ்வாறு யா/புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயத்தில நடைபெற்ற "ஆதார உணவு வழங்கல்" நிகழ்வுக்கு தலைமை தாங்கிய அப் பாடசாலை அதிபர் எஸ். கே.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 20 வருடகாலமாக இடம்பெற்ற கொடிய யுத்தத்தினால் எமது மக்கள் உறவுகளை இழந்தும், உடமைகளை இழந்தும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி இயற்கை அழிவும் எமது மக்களை நிலைகுலையச் செய்துள்ளது.

அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் மக்களை புறக்கணித்தே வருகிறது. தற்போது வறிய மக்களுக்காக வழங்கப்பட்டுவந்த அரச நிவாரணமும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பலர் பட்டினியால் மரணமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். போசாக்குள்ள உணவு கிடைக்காமையால் நோயாளிகளாக மாறுகின்றனர்.

அநேகமான மாணவர்கள் காலை உணவு அருந்தாமலே பாடசாலைக்கு வருகின்றனர். சில மாணவர்கள் பாடசாலைக் கல்வியை நிறுத்திவிட்டு வேலைதேடி அலைகின்றனர்.

இவ்வாறான நிலையில் புலம்பெயர்ந்துவாழும் எமது தாயகப் பகுதி இளைஞர்கள், தங்களின் வருமானத்தின் ஒரு பகுதியையேனும், வறிய மாணவர்களின் கல்விக்காகச் செலவிடவேண்டும்.

எமது பிரதேசத்தில் இயங்கிவரும் 5 பாடசாலைகளில் 4பாடசாலைகளுக்கு எமது பகுதியைச் சேர்ந்த கனடாவாழ் பழைய மாணவர்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

அந்த நிதியுதவி மாணவர்களுக்கு உணவு வழங்கல் திட்டத்திற்காகச் செலவிடப்படுகின்றது. இதேபோல் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் உதவ வேண்டும் என்றார்.

(க-126)

# பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவு சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அரச நிர்வாக அமைப்பு தீர்மானித்துள்ளது.

நடைமுறையில் இருக்கின்ற சட்டத்தில் தற்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றங்கள் கொண்டு வருவதற்கு எதிர்பார்ப்பதாக பதிவாளர் நாயகம் சி.கே. ரத்ணசிறி தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் தோட்ட பிரதேசங்களில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவு நடவடிககைகளுக்காக பதிவாளர்களை நியமிப்பதற்கு ஏற்ற வகையில் புதிய திருத்தங்களை கொண்டு வர இருப்பதாக பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தோட்டப் பகுதிகளில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு நடவடிக்கைகளில் நிலவுகின்ற சிக்கல்களை நிவர்த்தி செய்யமுடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தோட்டப்பகுதிகளில் தற்போது இந்த நடவடிக்கைகள் தோட்ட நிர்வாக அலுவல்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேசமயம் திருத்தங்களை கொண்டுவ்ருவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (க-5)

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

(யாழ்ப்பாணம்)

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.மாவட்ட அரசியலதுறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் தலைமையுரை மற்றும் சிறப்பு ரையை ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலைய இயக்குநர் கலாநிதி அ.சண்முகதாஸ் வழங்கவுள்ளார்.

ஊடகவியலாளர்-சுற்றுச்சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் வெளியீட்டுரை வழங்குவார். தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டுவைக்க நூலின் முதற்பிரதியை புதிய விஞ்ஞானக் கல்வி நிலைய இயக்குநர் இரா.அருட்செலவன் பெறுவார்.

சிறப்புப் பிரதிகள் வழங்கல் மற்றும் மதிப்பீட்டுரைகள் என்பவற்றை யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வழங்குவார். (ந-2)

# இருவேறு விபத்துக்களில் நான்கு பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மோட்டார்சைக்கிளும் துவிச்சககர வண்டியும் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இவ் விபத்துச் சம்பவத்தில் த.தர்மசீலன் (வயது-19),கு.வரதராஜா(வயது-49) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்துச் சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இ.கஜீபன் (வயது-35),ம.சசிதரன் (வயது-16) ஆகியோரே காயமடைந்த நிலையல் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ந-8)

# 60 கைதிகளுக்கு ஒருவாரகாலம் விடுதலை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பலதரப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறுபது பேரை ஒரு வாரகாலம் விடுதலை செய்வதற்கு சிறைச்சாலை திணைகளம் நடவடிக்கை எடுத் துள்ளது.

சிறைச்சாலைகளுக்குள் நன்னடத்தை அடிப்படையில் செயற்பட்ட கைதிகளையே இவ்வாறு விடுவிக்கப்படவிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நன்னடத்தையிலான சிறைக் கைதிகளின் தண்டனைக் காலம் ஒருவருடம் பூர்த்தியடைந்த பின்னர் ஆறு மாதத்திற்கொரு முறை அவர்களை இந்த அடிப்படையில் விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இம்மாதத்தின் ஒரு வாரத்தில் விடுதலை செய்யப்படும் 60 கைதிகளுக்கும் அவர்களது இல்லங்களில் அந்தக் காலத்தை கழிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைக்காலம் பூர்த்தியடைந்ததும் அவர்கள் மீண்டும் சிறைச்சாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் இல்லையேல் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துச் சென்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்று ஆணையாளர் கூறியிருக்கின்றார்.

இடைக்கால விடுதலையில் சென்று சிறைச்சாலைகளுக்குத் திரும்பாதவர்கள் மீது அமுலில் இருக்கின்ற சட்டத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார். (க-5)

# சேது சமுத்திரத் திட்டத்தால் சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு

## -சுற்றுச் சூழல் ஆர்வலர்கள்

இந்தியக் கூட்டரசின் சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கைக்கு சுற்றுச்சூழல் பாதிப்பு பாரியதாக இருக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறியுள்ளனர்.

சேது சமுத்திரத் திட்டத்தினபடி கடலை ஆழப்படுத்தும் போதும், அதைத் தொடர்ந்த நடவடிக்கைகளாலும் மீன் இனங்களுமபவளப்பாறைகளும் தொடர்ந்து அழிந்துவிடும் என்று சுற்றுச்சூழல் அமைப்பின் நிர்வாகி சட்டத்தரணி ஜெகத் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் கூறியதாவது,

சேது சமுத்திரத்தைத் தொடங்கும் முன்பாக சுற்றுச்சூழல் தொடர்பான பாதிப்புகளை ஆய்வு செய்யுமாறு இந்தியாவுக்கு இலங்கையரசு கோரிக்கை விடுக்க வேண்டும்.

முக்கியமாக பாக்கு நீரிணைப்பு மற்றும் மன்னார் வளைகுடாப் பகுதியில் இந்தக் கால்வாய்க்கான ஆழப்படுததும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டப்பணிகள் இலங்கைக்கு மிக அருகாமையில் மேற்கொள்ளப்படவுள்ளதால் இலங்கையின் சுற்றுச்சூழல் கடுமையான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்றார் அவர். (ற)

## இன்று ஒரு தகவல்

# டாக்டர் பயம்

"நான் இந்த உலகில் எதற்கும் பயப்படமாட்டேன் சார்" என்று மார்தட்டுவார் ஒருத்தர். அவருக்கு ஒருநாள் திடீரென்று உடல் நலமில்லாமல் போய்விட்டது. "சரி புறப்படுங்கள் டாக்டரிடம் போய் விட்டு வரலாம்" என்று கூப்பிட்டார்கள். "அது எதற்கு... வேண்டாம்" என்று இலே சாக நடுங்க ஆரம்பித்து விட்டார். என்ன சார் இது? அவ் வளவு தைரியமாகப் பேசுகிறீர்கள் டாக்டர் என்றால் மட்டும் இப்படிப் பின்வாங்குகிறீர்கள்? என்று கேட்டிருக் கிறார்கள். "அவரிடம் போனால் ஊசி போடு வார். ஊசி என்றால் எனக்கு ஒரு மாதிரியாக இருக்கும்" என்றார்.

இவர் இருக்கட்டும். டாக்டர் என்றால் பொதுவாக எல் லோருக்குமே ஒரு படம் உள்ளுக்குள் இருக்கத்தான் செய் கிறதாம். இருந்தாலும் அதை யாரும் ஒத்துக் கொள் வதில்லை. ப்யப்படுவதாக வெளியில் காட்டிக் கொள்வது மில்லை. இது தொடர்பாக சில மதிப்பீடுகள் செய்திருக்கிறார்கள்.

அந்த புள்ளிவிபரம் என்ன சொல்கிறதென் றால் அனேகமாக எல்லோருக்குமே இந்தப் பயம் இருக் கிறதாம். அதுவும் பெண்களைவிட ஆண்களுக்குத் தான் இந்தப் பயம் அதிகமாக இருக்கிறதாம்.

எனக்கு தலைவலிக்கிறது. வயிறு வலிக்கிறது என்று வெளியே காட்டிக் கொள்வது கூட ஒரு பலவீனம் என்று ஆண்கள் நினைக்கின்றனராம். கிட்டத்தட்ட எல்லோருமே அப்படித்தானாம். சரி... இந்த டாக்டர் பயத்திற்கு என்ன காரணமாக இருக்கும். அதைப் பற்றியும் ஆய்வு செய்து சில விபரங்களைக் கூறியிருக் கிறார்கள்.

மனிதர்களில் பலபேர் சாவதற்குக் கூடப்பயப்படுவ தில்லை. ஆனால் வியாதி என்றால் பயப்படுகிறார்களாம். ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

மனித சுபாவம் கெட்ட செய்தியை கேட்க விரும்புவ தில்லை. டாக்டரிடம் போனால் அவர் என்ன சொல்லி விடு வாரோ என்ற பயம். உங்கள் உடலில் ஒரு கோளாறு என்றால் அதை சொல்லித்தானே ஆகவேண்டும். சொன் னால் உங்களுக்குப் பிடிக்காது என்பதற்காக அதை சொல் லாமல் இருக்க முடியுமா?

இன்னொரு விதமான பயம் என்னவென்றால் டாக் டரிடம் போய் கேட்டால் அவர் சொல்லும் படி நடக்க வேண்டி வருமே அதற்கு மேல் நாம் நமது இஷ்டப்படி நடக்க் முடியாதே என்ற ஒரு நினைப்பு வேறு வந்து விடும். தேநீர் என்றால் மிகவும் பிரியமாக சாப்பிடுகிறோம்.

டாக்டர் ஏதாவது ஒரு மருந்தைக் கொடுத்து குடிக்கச் சொல்லி அது முடியுமட்டும் தேநீரைக் கண்ணால் பார்க் கக் கூடாது என்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற தயக்கம்.

டாக்டரிடம் போனால் நமது பழக்கத்தை மாற்றிக் கொள்ளச் சொல்வாரோ என்ற பயம்.

டாக்டரிடம் போய்விட்டால் அந்த நிமிடத்திலிருந்து இன்னொருவர் கையில் விழுந்து விடுவோம் என்ற எண் ணம் வந்துவிடுகிறது. அதன்பின்பு அவர் சொல்லும்படி நடக்க வேண்டுமேயென்ற நினைப்பு வந்துவிடும்.

இதெல்லாம் சேர்ந்து தான் உள்ளுக்குள் ஒரு பயமாக மாறி விடுகிறது என்பது நிபுணர்களின் கணிப்பு.

ஒரு பெரியவர் என்னிடம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர் சொன்னார் "சார் மனி தனுக்கு நான்கு விதமாக மரணம் வருகிறது" என்றார். "எப்படி?" என்றேன். "ஒன்றுவிபத்து, இரண்டு தற்கொலை, மூன்று கொலை, நான்கு டாக்டர்களின் கவனக்குறைவு" என்றார். இது அவர் கொஞ்சம் வேடிக்கையாகவும் மிகைப் படுத்தியும் சொன்ன ஒரு விஷயம்.

இன்றைய தகவலிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நமது உடலுக்கு ஒரு கஷ்டம் வந்தால் சரியான பொருத்தமான டாக்டரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்ததற் குப்பின் டாக்டர் பற்றிய பயம் நமக்குத் தேவையில்லை. இப்படி நடந்து கொண்டால் தான் உடனுக்குடன் வியா தியைக் கண்டுபிடித்து அதை நிவிர்த்திக்க முடியும். இல் லாவிட்டால் வியாதியை முற்ற விட்டுவிட்டு அதன்பின் அதைச் சரி செய்வதற்கு மிகக் கஷ்டப்பட வேண்டியி ருக்கும்.

ஒரு பெரியவருக்கு வயிற்றுக் கோளாறு "வாருங்கள்! டாக்டரிடம் போகலாம்" என்று கூப்பிட்டனர். "வேண்டாம் பயமாக இருக்கிறது" என்றார் அவர். "டாக்டர் உங்கள் மாப் பிள்ளை தானே என்ன பயம்?" என்றனர். "அது தான் பயம்" என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அமெரிக்கா,சீனா ஆகியவற்றின் உதவியுடன் தற்காலிக சுனாமி எச்சரிக்கை நிலையம்!

இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கைக் கருவி பொருத்தப்பட இன்னமும் 18 மாதங்கள் எடுக் கும். இதனால் அதுவரை தற்காலிகமாக சுனாமி எச் சரிக்கை நிலையமொன்று இவ்வருட முடிவிற்குள் ஏற் படுத்தப்படுமென இலங்கை புவியியல் நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது ஒரு பாரிய பணி. ஒவ்வொரு நாடுகளும் தத் தமது பணிகளைச் சரியாகச் செய்துமுடிப்பதிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது என இந்நிபுணரான சரத் வீரவர்ண்குல தெரிவித்தார்.

யுனெஸ்கோ நிபுணர்கள் குழுவினர் இங்குள்ள நிபுணர்களுடன் அண்மையில் பேச்சுக்களை நடாத் தியிருந்தனர்.

தற்போது இந்தியப் பெருங்கடல் அமெரிக்காவிலி ருந்தும் ஜப்பானில் உள்ள நிலையத்திலிருந்துமே தகவல்களைப் பெறுகிறது. இந்திய பிராந்தியத் தில் அலைகளின் தன்மை உட்பட வேறு பல விஞ் ஞானத் தகவல்களைப் பெற 57 நிலையங்கள் உள்ள போதிலும் இவை சுனாமிக்கு ஏற்றவகையில் வடிவ மைக்கப்பட்டவையல்ல.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 2 ஆவது அழிவுக ளுக்குள்ளான நாடாக இலங்கை விளங்குகிறது. இப்புதிய எச்சரிக்கை நிலையம் ஏற்படுத்தப்படு வதற் கென 907 மில்லியன் அமெரிக்க டொலர் இம்மாத முற்பகுதியில் கிடைக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நடவடிக்கை எடுத்துள்ளார். அத்துடன் இது ஏற்படுத்துவதற்கு சீனப் பிரதமர் வென்ஜி யாடோ இலங்கைக்கு ஏப்ரலில் விஜயம் செய்தி ருந்தபோது உதவிபுரிவதாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

# மக்கள் ஆணையுடன் ஆட்சியமைத்த அரசு

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது அவசியம்

(கொழும்பு)

நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் இணைந்து இரண்டு பிரதான கட்சிகளும் அமைத்துக்கொண்ட கூட்டமைப்பை முன்கொண்டு செல்லுவது அதன் தலைவர்களின் பொறுப் பென கமத்தொழில் பிரதியமைச்சர் விமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நிக்கம்பெட்டிய பியகமவில் 1000 குளங்களைப் புனரமைக்கும் செயற்திட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் சிறந்தது பொதுக்கட்டமைப்பா அல்லது கூட்டமைப்பின் செயற்திட்டமா? என்பதுகுறித்து முடிவு ஒன்று எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை சிலர் கருத்துக்களை விளங்கிக் கொள்ளாமல் பொதுக்கட்டமைப்புக்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறிவருகின்றனர்.

ஒருவருட காலமாக இந்த நாட்டின் இரு அரசி யல்கட்சிகள் மக்களின் பங்களிப்புடன் ஒன்றிணைக் கப்பட்டு ஒரு திட்டத்தில் இணைந்து செயற்பாட்டை முன்னெடுத்ததன் மூலம் இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு பிரதி பலன்கிடைத்துள்ளது.

அதனால், மக்கள் ஆணையுடன் தேர்ந்தெடுக் கப்பட்ட அரசு என்ற வகையில் இந்தப் பொதுக் கட்டமைப்பு முன்னெடுத்துச் செல்லவேண்டும். இது தான் நாட்டு மக்களுக்கு தலைவர்கள் செய்யும் கடமையாகும் என்றார். (ற-8)

# காடைத்தனத்தை உடன் நிறுத்துக!

# இன்றேல் அரசுக்கு எதிராக போராட்டம் முன்னெடுக்கப்படும்

தமிழர் தாயகத்தின் தலைநகரான திருகோணமலை யில் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் மேற்கொண்டு வரும் தமது காடைத்தனத்தை உடன் நிறுத்த வேண்டும். இதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்து அங்குள்ள பதற்ற நிலையினைத் தணித்து ஓர் இயழ்பு நிலையினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வலியுறுத்தியுள்ளது.

சிங்கள அரசாங்கம் தமது திட்டமிட்ட குடியேற்றங் கள் மூலம் தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிர மித்து வந்துள்ளது. தமிழர் நிலங்களை ஆக்கிரப்பதன் மூலம் அப்பிரதேசங்களை சிங்களமயப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. அதில் ஒரு செயற்பாடே திருமலை நகரப் பகுதியில் புத்தர் சிலையை நிறுவியமை, இதனால் ஏற்பட்ட குழப்பமே இன்று ஏற் பட்டுள்ள பதற்ற நிலையாகும். இதனால் தமிழ் மக் கள் நாளுக்கு நாள் சிங்களக் காடையர்களின் தாக்கு தல்களுக்கு உள்ளாகி வருவதோடு, அவர்களது உட மைகளும் நாசமாக்கப்பட்டு வருகின்றன.

இதனைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கைகளை யும் எடுத்தாக தெரியவில்லை. மாறாக மேலும் நிலை மையைச் சிக்கலாக்கி பிரச்சினையை வளர்ப்பதிலேயே அரசும் மற்றும் பேரினவாதக் கட்சிகளும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

திருகோணமலை தமிழ் மக்களின் தாயக பூமி அதனை சிங்களம் தமது திட்டமிட்ட குடியேற்றம் மூலம் அங்கு பௌத்தத்தைக் கொண்டு வந்து அதனை சிங் களவருடைய ஆளுகைக்குள் கொண்டு வருவதிலே தான் அரசு குறிப்பாக உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியும் அரசு தமிழ்மக்கள் மீதும், தமிழீழ விடுதலைப் புலி கள் மீதும் நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி தமிழ் மக் களுடைய போராட்டத்தை நசுக்க கனவு காண்கிறது.

அத் துடன் அரசானது போரினாலும், இயற்கை யின் சீற்றத்தாலும் அழிந்த தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்புதவற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த பொதுக்கட்டமைப்பைக்கூட வழங்குவதற்கும் பின்னடிக்கிறது என்றால் தமிழ் மக்களது உரிமையை சிங்கள அரசால் எவ்வாறு தரமுடியும்?

அந்த வகையிலேதான் இந்த சமாதான கால சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள அரசு தமி ழர் தாயகப் பிரதேசங்கள்மீது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் திட்டமிட்ட பௌத்த விகாரை களையும் அமைத்து அதனை சிங்களமயப்படுத்த முனைகிறது.

இவ்வாறான சிங்கள காடையர்களது காடைத் தனமான செயல்களையும், மத ரீதியான ஆக்கிர மிப்பு நடவடிக்கைகளையும் தமிழர்களாகிய நாம் இனியும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே, திரு கோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றி எமது உறவுகள் மீதான தாக்குதல்களை நிறுத்தி இயல்பு நிலையை ஏற்படுத்தாவிட்டால், வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு அரசிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றோம் என அக் கடிதம் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# நெடுங்குளத்தில் சடலம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்குளத்தி லிருந்து சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச் சடலத்தை நெடுங்குள மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை நெடுங்குளத்தினுள் மிதக்கும்போது கண்டுள்ளனர்.

இதனை அடுத்து பொலிஸாருக்கு மக்களால் அறி விக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி ஸார் சடலத்தை மீட்டுள்ளனர். சடலத்தை பார்வையிட்ட பதில் நீதியாளர் சிற்றம்பலம் இதற்கான விசாரணை களை உடனடியாக ஆரம்பிக்குமாறு உத்தரவு பிறப் பித்தார். தற்பொழுது வவுனியா பொது வைத்தியசாலை யில் வைக்கப்பட்ட இச்சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (க-4)

# அங்கவீனர்களுக்கு வேலை

# வழங்கும் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள அங்கவீனர்களுக்கு வேலை வழங்கும் விசேட திட்டமொன்றை தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

புதிய தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியை வழங்கியபின்னர் தொழில் வாய்ப்பை வழங்கவுள் ளதாகத் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் மூலம் அங்கவீனம் அடைந்தவர் களுக்கு இதன்மூலம் தொழில்வாய்ப்பு வழங்கப் படவுள்ளது. அதேவேளை, பிறப்பினாலும் அங்க வீனம் அடைந்தவர்களுக்கு தொழில் வழங்க அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு அரச மற்றும் தனியார்துறைகளில் தொழில் வழங்கப்படும். இது தொடர்பாக தனியார் துறையினருடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-8)

# தமிழகப் பயணம்

**1** பயணக் கட்டுரைகளுக்கு ஒரு காலத்தில் இருந்த வரவேற்பு இப்போதெல்லாம் இல்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக 1983 களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து மக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த பயணக் கட்டுரைகளை நாட்டில் நடந்த யுத்தம் தூக்கியெறிந்த தெனலாம்.

ஈழப் போராட்டத்தின் கருக் கட்டலுடன் மேற்குலக நாடுகளுக்குச் செல்லும் படலமும் கருக்கடடத் தொடங்கி விட்டது.

இலண்டன், கனடா, ஜேர்மன், சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி என சர்வதேச நாடுகளில் இலங்கைத் தமிழர்கள் குடிபுகத் தொடங்கினர். ஆரம்பகட்டத்தில் வெளி நாட்டுப் பயணங்கள் மந்த கதியில் இருந்தாலும் பின்னர் அதன் வேகம் அளவு கடந்து இப்போது தடுக்கித்தள்ளாடும் முதியவர்களும் அந்த நாடுகளுக்குச் செல்லும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கண்டேனே! இன்று இலண்டன் சென்று விட்டாரா? என்று கேட்பதெல்லாம் இப்போது சாதாரண விடயமே. அந்த வகையில் இந்தியா செல்வதென்பது எவ்வளவு மலிவானதென்பதை நான் கூறி நீங்கள் தெரிய வேண்டியதல்ல.

## அந்தக்கால இந்தியப் பயணம்

இன்று மலிந்து போன இந்தியப் பயணங்கள் அந்தக் காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கைச் சொல்வதற்கே வார்த்தை இல்லையெனலாம்.

தலை மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்குமிடையே கப்பல் போக்குவரத்து இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் இந்தியா செல்வது சுலபமாக இருந்தது.

இருந்தும் அந்தப் பயணத்தை பணபலம், செல்வாக்குப் பலம் படைத்தவர்களே அனுபவித்துக் கொண்டனர். இவ்வாறு கப்பல் மூலம் இந்தியா சென்று திரும்பி வந்தவர்களுக்கு உள்நாட்டில் தனிக் கௌரவம் இருந்தது. மக்காவுக்குச் சென்று திரும்பி வரும் முஸ்லிம்களுக்கு இருக்கக் கூடிய மதிப்புப் போன்று இந்தியாவுக்குச் சென்று வந்தவர்களுக்கும் இருந்ததென்று கூறினால் அதில் மிகை எதுவும் இருக்க முடியாது.

தலயாத்திரையை மையமாகக் கொண்டு இந்தியா சென்று திரும்பியவர்கள் நாட் கணக்காகக் கூறும் கதைகள், இந்தியப் பயணம் பற்றிய ஓர் விருப்ப உணர்வை அன்று ஏற்படுத்தியிருந்தது.



இப்போதெல்லாம் இந்தியப் பயணம் சர்வ சாதாரண நிகழ்வாயினும் எமது

**பயணக் கட்டுரை**

பயணம் சற்று வித்தியாசமான தென்பதால் எமது பயண அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நியாயப்பாடு இருக்கவே செய்யும்.

## ஊடகவளங்கள் பயிற்சி மையம் (MRTC)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையம் (MRTC) யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் யுனெஸ்கோ அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டது.

பத்திரிகைத் துறையில் பயிற்சி வழங்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு மூன்று ஆண்டுகளைக் கடந்து விட்டபோதிலும் அத்தகையதொரு அமைப்பு யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருக்கும் செய்தி பலருக்கு தெரியாமலிருப் பதுவிசித்திரமானதே. எனினும் எமது இந்தியப் பயணத்திற்கு வித்திட்ட ஊடகவளங்கள் பயிற்சிமையம் பற்றிய சில செய்திகளையாவது இக் கட்டுரைப் பகுதியில் தெரிவித்து அதனை உங்களிடம் சேர்ப்பிப்பதும் ஒரு வகையில் திருப்திதரக்கூடியதே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றிப் பலர் பலவாறு புகழுரை கூறினாலும் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் துணை வேந்தராகப் பதவியேற்பதற்கு முன் யாழ்ப்பாண சமூகமும் யாழ். பல்கலைக் கழகமும் அந்நியப்பட்டிருந் தது என்ற உண்மை தெரிந்தவிடயமே.

பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் துணைவேந்தராகப் பதவியேற்றதன் பின்னரே உயர்தரப் பரீட்சையினூடாகப் பல்கலைக்கழக அனுமதி பெறுபவர்கள் மட்டுமன்றி ஏனையவர்களும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற, பல்கலைக் கழகப்பட்டம் பெறுகின்ற வாய்ப்பு உண்டென அறிய முடிந்தது.

தொழிலாளர் கல்வி, வெளிவாரி பட்டப்படிப்பு, புறநிலைப் படிப்புகள் என்ற கற்கைநெறிகளை உருவாக்கிய பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் இதழியல் துறைசார் கற்கை நெறியை ஆரம்பிக்க வேண்டுமென எண்ணியதன் விளைவே ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் தோற்றமாகும்.

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் வீதியிலுள்ள யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான சிற்றி ஹோலில் இம்மையம் இயங்குகின்றது.

இதன் தொடக்க நிகழ்வின் போது பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை துணைவேந்தராக இல்லாவிடினும் "ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் உருவாக்கத்திற்கு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையே மூல காரணம்" என தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்கள் தனதுரையில் குறிப்பிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்தும் துரதிஷ்டவசமாக துணைவேந்தர் மோகனதாஸ் அவர்களின் உரையை காதில் போட்டுக்கொள்ளாத ஒரு சில பத்திரிகையாளர் சங்கங்களும், சில பத்திரிகையாளர்களும் ஊடக வளங்கள் பயிற்சிமையத்தின் உருவாக்கத்திற்கு தாமே காரணமெனக் கூறிக்கொள்கின்றனர்.

உண்மைக்குப் புறம்பான உரிமை கோரல்கள் எமது வழக்கங்களில் ஒன்றாயினும் அதுவே எமது முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றதென்ற உண்மையை காலங்கடந்தேனும் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## இதழியல் டிப்ளோமா

டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட் ஊடகவளங்கள் பயிற்சி மையத்தின் முதலாவது பணி யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாக இருந்தது.

இதனைச் செம்மையாக நிறைவேற்றுவதற்காக யுனெஸ்கோ அமைப்பால் தமிழ் நாட்டைச் சேர்ந்த கலாநிதி அருட் செல்வம் பயிற்சி இணைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தமிழ்நாடு திருநெல்வேலி மனோன் மணி சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் இதழியல்துறை விரிவுரையாளரான கலாநிதி அருட்செல்வம் அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை சிறப்புற ஆற்றினார்.


**என்.விஜயன்**


தமிழகத்துப் பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்கான கருத்துரைகளும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதன் பணியோடு இதழியல்டிப்ளோமா கற்கை நெறியை பயிற்சிமையம் பகுதிநேரமாக ஆரம்பித்தது.

இதில் இருபது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்த மாணவர்களுக்கான இதழியல் பயிற்சியின் ஓர் அங்கமாகவே இந்தியப் பயணம் அமைந்திருந்தது. (வளரும்)







நாட்டுப்பற்றாளர் செம்-பியன் செல்வனின் இறுதிக்கிரியைகள் நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செம்பியன் செல்வனின் மனைவி மலர்மாலை அணிவிப்பதையும், மாநகரசபை ஆணையாளர் குணராசா மலர்மாலை அணிவிப்பதையும், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தமிழீழ தேசியக் கொடியினை போர்த்திக் கௌரவிப்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் ஆகியோர் இரங்கல் உரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-ஞா. ஐங்கரன்)

# மெல்லக் கொல்லும் இரத்தக் கொதிப்பு

## மருத்துவ விளக்கம்

உயர் இரத்த அழுத்தம் அல்லது இரத்தக்கொதிப்பு என்பது இதயத்தின் சுருங்கும் தன்மை, புறத்தே செல்லும் தமனிகள் இரத்த ஓட்டத்தை எதிர்கொள்ளும் பாங்கு, சுருங்கி விரியும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தது.

இதயம் அதிகமாக இரத்தத்தை வெளியேற்றும்போதும் அலலது புறத்தமனிகள் அதிகமான அளவிற்கு சுருங்கிவிடுவதாலும் உயர் இரத்த அழுத்தம்உண்டாகிறது.

இதனை பாதரசம் உள்ள ஒரு சாதனம் மூலம் அளவிடலாம். சாதாரணமாக 120/80 **mm Hg** என்பது சரியான அழுத்த அளவு என்பர். வயதான ஒருவரின் தமனிகளின் சுவர்கள் தடிப்பாகி, முன்போல் விரியும் தன்மை குறைவற்று இருக்கும் எனவே வயோதிபர்களின இரத்த அழுத்த அளவு அதிகமிருககலாம். எழுபது வயதுக்காரருக்கு 170/90 என்பது சரியான ஆரோக்கியமான அளவு எனலாம். ஆனால் இருபது வயது இளைஞனுக்கு இந்த அளவு இரத்த அழுத்த நோயைக் குறிக்கும். 170 எனும் எண் இதயம் சுருங்கும் போதுள்ள அழுத்த அளவை (**Systole**) குறிப்பிடுகிறது. பொதுவாக வயதுடன் 100 ஐ கூட்டிககொள்வதும் அல்லது 150 சுவரையிலும் சிஸ்டோலின் உயர் அளவு என்றும், அதில் 2/3 பங்கு அலலது 92ஐ டயஸ்டோலின்உயர் அளவு எனவும் கொள்ளலாம். உயர் இரத்த அழுத்தத்திற்குப்பல காரணங்கள்உள்ளன.

### சிறுநீரகக் கோளாறுகள்

சிறுநீரகங்களில் ஏற்படும் நாள்பட்ட கோளாறுகள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். சிறுநீர், இரத்தம் ஆகியவற்றைச் சோதனை செய்வதன் மூலமும், வேறு சில சோதனைகள் மூலமும் இதனை அறியலாம். சிறுநீரில் இரத்தம், உப்பு ஆகியவையும் இரத்தத்தில் யூரியா கிரியாடினின் அளவையும் ஆராய வேண்டும்.

பிறவியிலேயே உண்டாகும் மகாதமனி சுருக்கத்தின் காரணமாக இரத்த அழுத்தம் அதிகமாகலாம். இவர்களுக்கு இடுப்புக்கு மேற்புறம் அதிக இரத்த ஓட்டமும் கீழ்ப்புறம் குறைவான ஓட்டமும் காணப்படும். அதாவது இரத்த அழுத்த அளவைக் கைகளில சோதித்தால் அளவு அதிகமாகவும், கால், தொடைப் பாகத்தில் சோதனையிட்டால் குறைவாகவும் இருக்கும்.

### நாளமில்லாச் சுரப்பிகளின் கோளாறுகள்

அட்ரீனல சுரப்பி மீது ஏற்படும் கட்டிகள், கார்டி கோஸ்டிராய்டுகள் அதிகம் சுரப்பது, தைராய்டு சுரப்பியின் தீவிரச் செயல்பாடு, கருததடை மருந்துகளாகப் பயன்படும் ஈஸ்ட்ரோஜன் போன்றவை உயர் அழுத்தத்தை உண்டாக்கும்.

உறுப்புகளில் கோளாறு ஏதுமின்று அகக்காரணிகளின்றித் தோன்றும் உயர் இரத்த அழுத்தம ஒருவகையாகும். இதனை **Essential Hypertension** எனக் குறிப்பிடுவர். இது மன உளைச்சல், கவலை, வேலைப்பளு,ஆளுமை என பல காரணிகளால் தோன்றுவது.

### குறைந்த இரத்த அழுத்தம்

இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், உடற்பயிற்சியாளர்கள் போன்றோருக்கு இரத்த அழுத்த அளவு குறைவாக இருக்கும். இது ஒரு வியாதியல்ல. பெரியவர்களும் தங்களுக்குக் குறைவான இரத்த அழுத்தம் எனக் கூறிக் கொண்டு கவலை அடைகின்றனர். இதனால் நன்மையே தவிர தீமையில்லை என்பதை உணரவேண்டும். எப்போதும் உள்ள அளவு வெகுவாகக் குறைந்தாலோ, இதயவலி காரணமாகக் குறைந்தாலோ அல்லது அடிசன் நோய் எனும் அட்ரீனலின் குறைவாகச் சுரக்கும் நோய் போன்றவற்றால் ஏறபட்டால் 'சிகிச்சை' தேவையாகும்.

இரத்த அழுத்தத்திற்கு பல வகையான மருந்துகள் உள்ளன. நோயின தன்மையைப் பொறுத்து இதனை மருத்துவ ஆலோசனையின் படி உட்கொள்ள வேண்டும். ஓரளவு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள் (**Moderate Hypertensives**) மருந்துகள் இல்லாமல் சரிசெய்து கொள்ள முடியும்.

### எடை குறைப்பு

பெரும்பாலும் குண்டாக உடற்பருமனாக உள்ளவர்கள் இரத்தக கொதிப்பு நோய்க்கு ஆளாகின்றனர். அதிக உடல்பருமன் காரணமாக வென்ட்ரிக்கிள்களின் பணிச்சுமை அதிகமாகிறது. 1 கிலோ எடையைக் குறைத்தால் சுமார் 3 மி.மீ அளவு இரத்த அழுத்த அளவு குறைகிறது. இந்த அளவு குறைவு. உப்பைக் குறைப்பதால் மட்டும் ஏற்படுவதில்லை எனக் கண்டுள்ளனர்.

அதிகமான அளவில் உப்பை உணவில் சேர்த்துக் கொள்பவர்களுககு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதைக் கண்டுபிடித்துளளனர். உட்கொள்ளும் உப்பின் அளவைப் பாதியாகக் குறைப்பதன் மூலம் 7.1மி.மீ அளவு இரத்த அழுத்த அளவு குறைந்துள்ளது. மோருக்கு உப்பு, அப்பளம், ஊறுகாய் போன்றவற்றைச் குறைக்கவும். அதற்குப் பதிலாக பொட்டாசியம் குளோரைடைச் சிறிது சேர்க்கலாம்.

### கல்சியம் தேவை

போதுமான கல்சியம் இல்லாமையால் இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். உறுப்புகள் காரணமான இரத்த அழுத்த நோயில் கல்சியம் தேவை பற்றி முடிவான கருத்து இல்லை. ஆனால் அவயமசாரா இரத்த அழுத்தத்திற்கு கல்சியம் பயனளிப்பதாகக் கூறுகிறார்கள். கருவுற்ற தாய், குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோருக்கு எலும்பு உறுதிபடவும் கல்சியம் தேவையாகும்.

இறைச்சி, முட்டையின் மஞ்சள் பகுதி ஆகியவற்றை தவிர்ப்பது நல்லது. சைவ உணவு ஏற்புடையது. காய், கறிகள், பழவகைகள், கீரைகள் நன்மை தரும். மீன் - சிலவகை கடல் மீன்கள் இதயத்திற்கு நல்லது. கொழுப்பு வகைகளை, உறையும் எண்ணெய் வகைகளை விட்டு விடுங்கள்.

### புகை ஒரு பகை

புகைபிடிப்பதால் இரத்த அழுத்தம் அதிகரிக்காவிட்டாலும், இதயத்தசையிலும், நுரையீரலிலும், பலவகையான தீங்குகளைச் செய்கிறது. தமனிகளின் சுவர்கள் தடிப்பாகி விடுகின்றன. மூளையில உள்ள இரத்தக் குழாய்களில் இரத்தக்கசிவையும் உண்டாக்கும். மறதி, கை,கால் நடுக்கம், உறக்கமின்மை தோன்ற வழிவகுக்கும், பர்கர் வியாதி எனும் கால் விரல்கள் அழுகும் நிலை உண்டாகும்.

அற்கஹோல் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்கிறது என்பது தெளிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே மதுவகைகள் வேண்டாம். இவை இதயத்தை மட்டுமன்றி, கல்லீரல், வயிறு, குடல் ஆகியவற்றையும் பாதிக்கின்றன. இதயம் திடீரென நின்றுவிடுவது, காமாலை, வயிற்றுப் புண்ணினால் இரத்த வாந்தி என பல வேதனைகளுக்கு வழிவகை செய்கிறது குடிப்பழக்கம்.

கோபம், உணர்ச்சிவசப்படுவது, அவசரப்படுவது ஆகியவற்றைத் தவிர்க்கவும். அளவறிந்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். இரத்த அழுததம் உடையவர்கள் கடினமான உடற்பயிற்சி, எடை தூக்குவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். வேகமான நடை, நீந்துதல், சைக்கிளில் செல்வது, பூப்பந்தாட்டம் போன்றவை நல்லதாகும். தியானம், மன அமைதிக்கான பிரார்த்தனை, ஓய்வு, மன இறுக்கங்களைத் தளர்த்துவதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு வரலாம்.

இரத்தக்கொதிப்பு உள்ளவர்கள் காபி, தேநீர் அருந்துவதை நிறுத்துவது நல்லது. சில மருந்துகள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும். அவற்றைத் தவிர்க்கவும்.

உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக உள்ளதா என அறிய பல முறை - நாள்கள் அல்லது வாரஇடைவெளிகளில், நின்றுகொண்டும், படுத்துக்கொண்டும் டாக்டரிடம் சோதனை செய்து கொள்ளுங்கள். ஏனெனில் உயர் இரத்த அழுத்தம் என்பது நபருக்கு நபர் வேறுபடலாம். □

**டாக்டர் ஜி.ராஜமோகன்**

## வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

அராலி மத்தி வண்ணபுரம் விவசாய வீதி நியாப்திட்டம் II மூலம் புனரமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்டுள்ளார்.

இவ் வீதி திருத்தம் சம்பந்தமாக அண்மையில் பிரதேச செயலக உத்தியோகத்தர் குழுவொன்று வண்ணபுரம் கிராமத்திற்கு விஜயம் செய்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-49)

## உப்புக்குப் பெரும் கிராக்கி

(புத்தளம்)

இலங்கையிலுள்ள பிரதான உப்பு உற்பத்தி செய்யும் இடங்களில் ஒன்றான புத்தளத்தில் தற்சமயம் உப்புக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பினை வெளியூர் வியாபாரிகள் 50 கிலோ கொண்ட மூடையொன்றை 95 ரூபா முதல் 115 ரூபா வரையும் கொள்முதல் செய்து வந்தனர்.

ஆனால் தற்சமயம் 50 கிலோ கொண்ட மூடையொன்று 400 ரூபா வரைக்கும் விலை போவதாகவும் அந்த விலைக்கும் உப்புப் பெற முடியவிலலை எனவும் கவலை தெரிவிக்கப்பட்டள்ளது. (க-5)

## பயிற்சி வகுப்பு

(பொன்னாலை)

கிராமங்களின் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு சரியான முறையில் மேற்கொள்வது என்பது தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்று யாழ்ப்பாணம் பிள்ளையார் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

பங்கேற்பு கற்றல் செயற்பாடு என்னும் தலைப்பில் ஜீ.ரி.இசற் நிறுவனத்தினால் இந்த வகுப்பு நடததப்பட்டது.

வகுப்பில் கோப்பாய், மருதங்கேணி, தென்மராட்சி ஆகிய பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உதவித் திட்டமிடற் பணிப்பாளர்கள், திட்டமிடல் இணைப்பாளர்கள், சமுத்தி முகாமையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பங்கேற்பு கற்றல் செயற்பாடு தொடர்பான விரிவுரைகளை பெங்களூரைச் சேர்ந்தவரான ஆர்.சுரேஸ, திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவரான ரி.ஏ.வர்க்கீஸ், புதுக்கோட்டையைச் சேர்ந்தவரான திருமதி ஸ்ரெல்லா புஸ்பராணி ஆகியோர் வழங்கினர்.

(க-49)

## ஒரு இலக்கிய மலர் உதிர்ந்தது

(யாழ்ப்பாணம்)

நலல இலக்கியங்களைத் தேடிக் கற்பதுடன் அவற்றை மற்றவர்களையும் கற்பதற்குத் தூண்டி ஊக்குவிக்கும் இயல்பை உடைய ஒரு இலக்கிய மலர் உதிர்ந்துவிட்டது என செம்பியன் செல்வனின் மறைவையொட்டி தேசிய கலை இலக்கியப பேரவை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான செம்பியன் செல்வன் இளவயதிலேயே இலக்கியப் பணியில் ஈடுபாடு கொண்டு - தனது வாழ்வின் இறுதிவரை ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை நல்கி வந்தார்.

சிறுகதை, நாவல், இலக்கிய சஞ்சிகை வெளியீடு எனப் பல்வேறு துறைகளிலும்பங்களித்த இவர் தேசிய இன விடுதலைக்கான இலக்கியத் தளத்தில் உறுதியாகக் கால்பதித்து நின்றார்.

ஈழத்தின் பல்வேறு இலக்கிய அமைப்புக்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட, தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராக செயற்பட்டு வந்ததுடன், படைப்பாளிகள் இடையேயான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதிலும், இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் முன்னின்றார்.

மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளிபபது, மனித நேயத்துடன் மனந்திறந்து பேசி உறவாடுவது இவரது நற்பண்பாக இருந்தது.

நலல இலக்கியங்களைத் தேடிக் கற்பதுடன் அவற்றை மற்றவர்களையும் கற்பதற்குத் தூண்டி ஊக்குவிக்கும் இயல்பையும் இவர் இறுதி வரை பேணி வந்தார். இத்தகைய ஒரு இலக்கிய நண்பரின், மூத்த எழுத்தாளரின் இழப்பு ஈழத்து இலககிய உலகுக்கு பெரும் இழப்பாகும்.

இவரது மறைவுக்குத் தேசிய கலை இலக்கியப் பேரவை தனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினர்க்கு ஆறுதல் கூறி அமைகிறது என்று பேரவை விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## இதுவரை 85,000 இராணுவத்தினர் சேவையிலிருந்து தப்பியோட்டம்

இராணுவ சேவையிலிருந்து இதுகாலவரையில் மொத்தமாக 85 ஆயிரம் இராணுவத்தினர் சேவையை வட்டுத் தப்பியோடியுள்ளதாக இராணுவத்தலைமையக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி தொகையினரில் சுமார் 20 ஆயிரம் இராணுவத்தினர் சேவையிலிருந்து தப்பியோடியிருப்பது 2002 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரே என்பது குறிப்பிடத்தக்கது.

மீதியான சுமார் 60 ஆயிரம் இராணுவத்தினரும் 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முனனுள்ள காலப்பகுதியிலேயாகும். இதைவிட இதுவரையில் 10,292 இராணுவத்தினர் இராணுவ சேவையிலிருந்து சடட பூர்வமான நடவடிக்கைகள் மூலம் பாதுகாப்புத் துறையால் பதவி நீக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தப்பியோடிய மேற்படி சுமார் 85 ஆயிரம் இராணுவத்தினர் தொகையுடன் பதவி நீக்கப்பட்டவர்களின் தொகையும் சேர்க்கப்படின் மொத்தம் 95,292 பேர் இதுகாலவரையில் இராணுவ சேவையிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்,தப்பியோடியவர்களில் 1,415 இராணுவத்தினருக்கு சட்டபூர்வ சேவை விலகல் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 3,581 பேர் சட்டபூர்வ சேவை விலகலுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி இராணுவ மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.டி.சில்வா தெரிவித்திருக்கும் கருத்துக்கேற்ப, உலகின் பல்வேறு நாடுகளிலும் இவ்வாறு குறிப்பிட்ட காரணங்களுக்காக அந்தந்த நாட்டிலுள்ள இராணுவத்தினர் சேவையிலிருந்து விலகி வருவதாகவும் அத்தகைய நிலையே இங்கும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

(ற)

## பயன்படுத்தப்படாத காணியை பகிர்ந்தளிக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள வல்லிபுரம் பகுதியில் 1965 ஆம் ஆண்டு மத்திய தர வகுப்பினருக்கு ஆளுக்கு 5 ஏக்கர் வீதம் 121 பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட 605 ஏக்கர் காணியும் உபயோகிக்கப்படாமல் கைசோர விடப்பட்டதால் அக் காணிகளின் பகிர்வுரிமை ரத்துச் செய்யப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

இக் காணியை முதற்கட்டமாக வடமராட்சி கரையோரப் பகுதிகளில் வசிக்கும்காணியற்றவர்களுக்கும் நாகர் கோவிலில் இருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் வாழும் மக்களுக்கும் பங்கிட்டு வழங்குவதற்குப் பருத்தித்துறை பிரதேச செயலகம் நடவடிக்கையெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து-35)

## மஹோற்சவம்

(இணுவில்)

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

இதேவேளை, திருவிழாக் காலங்களில் தினமும் அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-122)

# மூன்றுவருட போர்நிறுத்த ஒப்பந்தம்

# சாதித்தது என்ன?

சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. தமிழ்மக்களைப் பொறுத்தவகையில் இந்த மூன்று ஆண்டுகளும் பொறுமையுடனும் விரக்தியுடனும் செலவாகியுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் சிங்கள அரசு காட்டிய சிரத்தையை அதை அமுல்படுத்துவதில் காட்டவில்லை.

160 நாள் வேலைத்திட்டத்தை உடன்பாடு உள்ளடக்கியிருந்தது. போக்குவரத்துத்தடை நீக்கப்படுவது, பொருளாதாரத்தடைகள் அகறறப்படுவது, இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுவது, அரசியல்தீர்வு எட்டப்படுவது என்று தீர்க்கமான வேலைத்திட்டங்களை அது உள்ளடக்கியிருந்தது.

போக்குவரத்துத்தடை நீக்கம், பொருளாதாரத்தடை நீக்கம் என்பன சிங்கள அரசின் நலனுடன் சம்பந்தப்பட்டிருந்தது. எனவே அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அதற்குச் சிரமம் இருக்கவில்லை. மீன்பிடித்தலுக்கு இன்னமும் கட்டுப்பாடும் தொல்லைகளும் இருக்கின்றன.

ஆனால் மக்கள் குடியிருப்புக்கள், ஆலயங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்களில் நிலைகொண்டுள்ள படையினரை விலக்கிக்கொள்வது மற்றும் அரசியல் தீர்வு காண்பது என்ற விடயங்களில் அளித்த வாக்குறுதிகளை சிங்கள அரசு நிறைவேற்றவில்லை.

### அரசியல் சதி

தற்போதைய போர்நிறுத்த உடன்பாடு உட்பட சிங்கள அரசுடனான எந்தவொரு உடன்பாடும் சர்வதேச கண்காணிப்பின் கீழ் நடைபெற வேண்டும் என்பது புலிகளின் அரசியல் நிலைப்பாடாகும். பேச்சுவார்த்தை என்ற போர்வையில் சிங்கள அரசு நடாத்த முனையும் சதி அரசியலை சர்வதேச சமூகத்திற்கு அம்பலமாக்கவே புலிகள் இயக்கம் இத்தகையதொரு நிலைப்பாட்டிற்கு வந்திருந்தது. புலிகள் கணித்தது போலவே அரசியல் ரீதியாக சிங்கள அரசு இன்று அம்பலமாகி வருகின்றது.

சமாதான முயற்சிக்குக் குறுக்கே நின்று இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை போடுவது புலிகள் இயக்கம்தான் என்று சிங்கள அரசு செய்துவந்த பிரச்சாரம் இன்று அடியோடு அற்றுப்போகும நிலை உருவாகிவருகின்றது. இனப்பிரச்சினை தொடர்பில் என்றுமில்லாத வகையில் சர்வதேச அழுத்தத்திற்கு சிங்கள அரசே உள்ளாகிவருகின்றது. இருந்தாலும் தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களின் ஜனநாயக உரிமைகளை வழங்குவதில சிங்கள அரசு தொடர்ந்தும் மறுத்துவருகின்றது.

### அர்த்தமற்ற பேச்சுவார்த்தைகள்

போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் சிங்கள அரசிற்கும் - புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஒவ்வொரு சுற்று அமர்வின்போதும் ஒவ்வொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும் எவையும் நடைமுறை வடிவம் பெறவில்லை. படைத்தரப்பின் ஒத்துழையாமை பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு என்று அவற்றிற்கு சிங்கள அரசு காரணங்கள் கூறியது. உண்மையில் தான் ஒப்புக்கொண்டபடி செயறபடச் சிங்கள அரசே மறுத்துவருகின்றது என்பதே மெய்யாகும். இந்தவகையில் ஆறுசுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றுப் போய்விட்டன.

பேச்சு முறிவடையப் போகின்றது - அதற்கு சிங்கள அரசையே சர்வதேச சமூகம் குற்றம் சாட்டப்போகின்றது என்ற ஒரு கட்டத்தில் உபகுழுக்கள் என்றவொரு தீர்மானத்தை அரசு முன்மொழிந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திருப்பியது. மக்களை மீளக்குடியமர்த்த ஒரு உபகுழு, இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க ஒரு உபகுழு, பொருண்மிய அபிவிருத்திக்கு ஒரு உபகுழு, அரசியல்தீர்வு தேட ஒரு உபகுழு என்று வெற்று ஆவணங்களை சிங்கள அரசு வரைந்து தள்ளியது.

எனினும் எந்த ஒரு உபகுழுவும் செயற்பாட்டுக் கட்டத்திற்கு வரவேயில்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு விடயங்களுக்கு சிரான் என்றதொரு கட்டமைப்பை நிறுவிய சிங்கள அரசு கொழும்பில் ஒரு அலுவலகத்தையும் திறந்திருந்தது. அதுவும் செயறபடாமலே செத்துப்போனது. இவை பற்றி சிங்கள அரசு கூச்சப்பட்டதாகவே தெரியவில்லை.

புலிகள் இயக்கத்தை உடன்பாடு வாயிலாக சமபங்காளிகளாக ஏற்றுக்கொண்டே போர்நிறுத்த ஒப்பநதத்தை வரைந்தது. ஆனால போரால் சிதைந்த இலங்கைத் தீவை புனரமைத்து அபிவிருத்தி செய்யும் இலக்குடன் உதவி வழங்கும் நாடுகள் கூட்டிய வாஷிங்டன் மற்றும் டோக்கியோ மாநாடுகளுக்கு புலிகளையும் அழைத்துச் செல்ல சிங்கள அரசு மறுத்துவிட்டது. தனியே சென்று பங்குபற்றியது. சிங்கள அரசின் இந்த ஏமாற்று அரசியலை புலிகள் கடுமையாக ஆட்சேபித்தனர். இறுதியில் இலங்கைக்கு உதவுவதாக வாக்களிக்கப்பட்ட அந்த பெரும் நிதியும் முடங்கிப்போனது.

தமிழர் தேசியத்திற்கு எதிராக தமிழ்க் குழுக்களைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளைக் குழப்புவது சிங்கள அரசின் வழமை. இதை கருத்திற்கொண்டு சமாதானத்தின் ஆயுளை உறுதிப்படுத்தும் நல்லெண்ணத்துடன் தமிழ்க்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு தமிழர் தாயகத்திற்கு வெளியே அவை அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று புலிகள் விரும்பியதை உடன்பாட்டில் இணைத்து சிங்கள அரசும் ஏற்றுக்கொண்டது.

### புதிய தமிழ்க்குழு உருவாக்கம்

ஆனால் அதையும் சரியாக அமுல்படுத்த அரசு முனைய வில்லை. அமுல்ப்படுத்தாதது மட்டுமல்ல புதிய தமிழ்க்குழு ஒன்றையும் உருவாக்கி - அதற்கு ஆயுதங்கள் வழங்கி புலிகள் இயக்கத்திற்கு எதிராக ஒரு நிழல் யுத்தத்தையும் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த அரச வன்முறைகளுக்கு பல போராளிகளும் தேசப்பற்றாளர்களும் ஊடகவியலாளர்களும் பலியாகியுள்ளனர்.

கிழககு மாகாணத்தைப் பொறுத்தவகையில் போர்நிறுத்த ஒப்பந்த விதிகளை சிங்கள அரசு சிறிதும் கடைப்பிடிக்கவில்லை. புலிகளை மீண்டும் போருக்கு இழுக்கும் ஒரு சதிக்களமாகவே கிழக்கு மாகாணத்தை அரசு பயன்படுத்துகிறது. அங்கே போராளிகளைப் படுகொலை செய்தல், மக்களைக் கொல்லுதல், தேசப்பற்றாளர்களை அழித்தல் என்று ஒரு கொலை அரசியலை நடாத்தி வருகின்றது.

காஞ்சுரன்குடா படுகொலை (9பேர் சாவு), திருமலை படுகொலை (3போ சாவு) அண்மையில் மட்டக்களப்பு சந்திவெளியில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை (2பேர் சாவு 25பேர் காயம்) என்று சமாதானப் படுகொலைகளைச் சிங்களப் படைகள் அங்கே நிகழத்தியுள்ளன. அண்மைக் காலமாக போக்குவரத்துத் தடைகளையும், சில பொருட்களுக்கான தடைகளையும் விதித்து படையினர் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

### ஒப்பந்த விதிகளை மீறும் படையினர்

இராணுவ கட்டுப்பாட்டுக்குள் உள்ள புலிகளின் அரசியல் அலுவலகங்கள் மீதும் ஆயுதத்தாக்குதல்கள் அவை தொடர்ச்சியாக நடாத்தி வருகின்றன. தமிழ் முஸ்லீம் உறவைச் சீகுலைக்கும் வகையில் திட்டமிட்ட கொலைகளையும் படையினர் செய்கின்றனர். சில தமிழக்குழு உறுப்பினர்களை வீதிச் சோதனைச் சாவடிகளில் பகிரங்கமாகவே நிறுத்தி மக்களை அச்சுறுத்தி ஒப்பந்த விதிகளை அப்பட்டமாக மீறி வருகின்றன.

அரசியல்தீர்வு என்ற விடயத்தில அதன் ஆரம்ப கட்டத்திற்குள நுழைவதையே சிங்கள அரசும் விருமபவில்லை. தீர்வுத்திட்டம் என்ற பெயரில் சிங்கள அரசு சமர்ப்பித்த திட்டங்கள் தமிழர் தேசியத்தைச் சிதைபபதையே குறியாகக் கொண்டுள்ளன. போர் இல்லாமல் - அமைதி வழியில் சிங்கள மேலாண்மைக்குள் தமிழ்மக்களைக் கொண்டு வரும அரசியல் சதிகளாகவே அந்தத் தீர்வுத்திட்டங்கள் அமைந்துள்ளன.

இவற்றையெல்லாம், புலிகள் இயக்கம் அடியோடு நிராகாரித்த போது புலிகள் இயக்கம் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிய வேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது. அதற்கமைய தமிழ் அறிஞர்கள் சர்வதேச சட்டவல்லுனர்கள் துணையுடன் ஒரு அரசியற் திட்டத்தை புலிகள் முன்வைத்தனர். இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்று பெயர்சூட்டி புலிகள் இயக்கம் முன்வைத்த தீர்வுத திட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டது.

ஆனால் சிங்களதேசம் அதை ஒட்டுமொத்தமாக நிராகரித்தது. சிங்களத்தின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. சந்திரிக்கா அம்மையார் தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியும அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கைத் தீவின் இறையாண்மைக்குக் குறுக்கே நிற்காது அதே சமயம் தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முனையும அந்த மாதிரி அரசியல் வரைபை சிங்களதேசம் நிராகரித்த விதம் சர்வதேச சமூகத்தை விசனத்திற்குள்ளாக்கிவிட்டது.

அமைதி வழிமுறையில் தமிழ் சிங்கள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுதேடும் நோக்குடன் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்பாடு இவ்விதம் செயலற்ற தன்மையுடன் நகர்ந்தது. காலம் கழிவதை புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அது இன்று வரை பொறுமை காத்துவருகின்றது. சிங்கள அரசுக்கு மேலும் மேலும் சந்தர்ப்பங்கள் வழங்கும் நோக்குடன் அடுத்தடுத்து விட்டுக்கொடுப்புக்களைச் செய்து பல ஆலோசனைகளையும் புலிகள் முன்வைத்து வருகின்றனர். ஆயினும் தனது கடும் போக்கிலிருந்து இனவாத சிந்தனையிலிருந்து சிங்கள அரசு விடுபடுவதாகத் தெரியவில்லை.

### நோர்வே பிரதிநிதிகள் பிரபாகரன் சந்திப்பு

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் மூன்றாந் தரப்பாக இருந்து கொண்டு சமாதானப் பேச்சுக்களுக்கு மத்தியத்துவராகச் செயற்பட்டுவரும் நோர்வே அரசின் பிரதிநிதிகள் பலதடவைகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கலந்துரையாடி கருத்துப் பரிமாற்றங்கள் செய்துள்ளனர்.

சிங்கள அரசு ஒப்பந்த மீறல்களைச் செய்து கடலிலும் - தரையிலும் புலிகள் இயக்கத்திற்கு பல உயிர் இழப்புக்களை ஏற்படுத்தி வருகன்றபோதும் சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ளதாக மாற்றச செய்வதில் தலைவர் பிரபாகரன் காட்டும் அக்கறையை விட்டுக்கொடுப்புக்களை நோர்வே தரப்பு புகழ்ந்துரைத்து வருகின்றது. சமாதான முயற்சிகளின் தற்போதைய தேக்க நிலைக்கு புலிகளை எவரும் குற்றம் சாட்டவில்லை. மாறாக சிங்கள அரசையே அவை குறைகூறி வருகின்றன. இதனை மேற்குலக நாடுகள்மீது சிங்களப் பேரினவாதிகள் வசைமாரி பொழியத் தொடங்கியுள்ளன.

முற்றிலும் மனிதாபிமான சேவைகளை நோக்காகக் கொண்ட சுனாமி அனர்த்த பொதுக் கட்டமைப்பையே ஏற்றுக்கொள்ளாது முரண்டுபிடிக்கும் சிங்கள அரசு எவ்வாறு தமிழருக்கான ஒரு அரசியல் நிர்வாக அலகு தொடர்பாக பேசப்படுகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

இந்தக கேள்வி இதுவரை காலமும் தமிழர் தரப்பபையே வாட்டி வந்தது இப்போது முதற்தடவையாக இக்கேள்வி சர்வதேச சமூகத்தையும் வாட்டத் தொடங்கிவிட்டது. □

நன்றி இணையத்தளம்

# இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாமை குறித்து குடாநாட்டு மக்கள்கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களாகிவிட்ட போதிலும் கூட இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாமை குறித்து குடாநாட்டு மக்கள் பெரும் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட ஏப்பிரல் மாதத்துக்கான நிலவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறி ஒருவருடம் பூர்த்தியடைந்துவிட்ட போதிலும்கூட இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை இரு தரப்பும் மதித்துக்கொள்ள வேண்டும் எனத் தமிழ்மக்கள் உணர்கின்றனர்.

கடந்த இரு தசாப்தகாலமாக தமிழ் மக்கள் அனுபவித்துவந்த சொல்லேணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் சமாதான நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட வேணடியமை இன்றைய கட்டாயமாக வுள்ளது. எனவே இரு தரப்பும் இணைந்து செயல்படுத்தக்கூடிய வகையில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து உரிய தீர்வைக்காண ஆவன செய்ய வேண்டும்.

ஊடகவியலாளர் தர்மரத்தினம சிவராம் படுகொலை செய்யப்பட்டு, இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அண்மித்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வீசப்பட்டமை ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட மாபெரும் சவாலாகக் கருதப்படுகின்றது.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையானது இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் இல்லையென்பதை முழுநாட்டுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறியுள்ளது.

மேலும் இந்த நிலவர அறிக்கையில் கல்வி, மின்சாரம், போக்குவரத்து, சுனாமி, மீன்பிடி, பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும், மிதிவெடி போன்ற விடயங்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-16)

# பொதுக்கட்டமைப்பு குறித்து விளக்க ஜே.வி.பியுடன் ஜனாதிபதி பேச்சு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பியுடன் இறுதியாக நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக தமக்கு பூரணமாகத் தெளிவுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி கூறியதையடுத்தே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் ஒன்பது தடவைகள் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருப்பதால் தமக்கு அதுகுறித்து முழுமையாகத் தெரிவிக்க வேண்டுமென ஜே.வி.பி கூறியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியைச் சந்தித்து முன்னர் பொதுக்கட்டமைப்பு விபரங்களடங்கிய உத்தியோகபூர்வ கோவைகளின் பிரதிகள் தமக்குத் தரவேண்டுமென ஜே.வி.பி தெரிவித்தது.

ஆனால்,ஜனாதிபதி அந்த ஆவணங்களை ஜே.வி.பிக்கு வழங்கவில்லை இயன்றவரைக்கும் ஜே.வி.பியின் சம்மதத்துடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்தாலும் அதற்கு ஜே.வி.பி தொடர்ந்தும் எதிர்ப்பைத் தெரிவிக்குமாயின் அந்த எதிர்ப்பைக் கருத்தில் கொள்ளாது பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான கோவையில் கைச்சாத்திடப் போவதாக சந்திரிகா ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி, உலக வங்கியின் பிரதித்தலைவர் பிரபுல் பட்டேல், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரிடம் கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வைத்துத் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையிடாக் கொள்கை; தெற்காசியப் பிராந்தியத்தில் பாக். இன் ஆதிக்கம் வலுவூன்றும்

## இந்திய ஆய்வாளர் சுட்டிக்காட்டு

(புதுடில்லி)

இந்தியாவிடம் விடுதலைப் புலிகள் தொடர்பான தெளிவான கொள்கை இல்லை. இதன் காரணமாக அந்நியசக்திகள் தெற்காசியப் பிராந்தியத்தில் ஆதிக்கம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியா படிப்படியாக தெற்காசியப் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டை இழந்து வருவதாக இந்திய ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சமாதான விவகாரத்தில் இந்தியாவின் தலையிடாத கொள்கை காரணமாகவே நோர்வே மத்தியஸ்த முயற்சிக்கு அழைக்கப்பட்டது என்றும பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டிய இந்தியா தனது இயலாமை காரணமாக நோர்வேயிடம் இலங்கை விவகாரத்தை கையளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை விவகாரத்தில் பாகிஸ்தான வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்து வருவதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்தியா தொடர்ந்தும் இது போன்ற தலையிடாக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமானால் தெற்காசியப் பிராந்தியத்தின் ஆதிக்கம் பாகிஸ்தானிடம் செல்வதைத தடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் வான் படை குறித்தும், கடற்புலிகளின் வளர்ச்சி குறித்தும் தனது கவலையை நோர்வேத்தரப்பிடம் தெரிவிக்கும் நிலைக்கு இந்தியா பலவீனப்பட்டுள்ளதையே அதன் அண்மைக்கால நடவடிகைகள் எடுத்துக்காட்டுவதாகவும் அந்த ஆய்வாளர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மஹிந்தவுக்கு ஆதரவு வலுக்கிறது

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் கள நிலைப்பாட்டிற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர் சிறிசேன கூரே உதவ முன்வந்துள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அண்மையில் சிறிசேன கூரேயும், மஹிந்த ராஜபக்ஷவும் இரண்டு மணி நேரம் அலரிமாளிகையில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய சேதியக் கட்சியைப் பொறுத்த வரையில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏகமனதாக அறிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் தேர்தல் பிரசாரங்களும், அரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்போ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ இன்னமும் இது குறித்து தீர்மானத்திற்கு வரவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அங்கீகரிக்க உடன்பட்டிருக்கின்றது. அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் இந்த வேட்பாளர் நிலைக்குத் தம்மைத் தயார் படுத்தி வருவதாகத் தொிவிக்கப் படுகிறது.

இந்த நிலையிலேயே பிரதமருக்கும் சிறிசேன கூரேக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

## தாந்தாமலையில் முதியவர் அடித்துக்கொலை

மட்டக்களப்பு தாநதாமலையில் முதியவா ஒருவர் அடித்துக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இருவர் மீது தமிழீழ காவல்துறையினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பிளாந்துறை தாமரைப் பூச்சந்தியைச் சேர்ந்த சிவசம்பு நாகண்டாப்போடி (வயது60) என்ற முதியவர் கடந்த 18ஆம் திகதி தாந்தாமலையிலுள்ள முந்திரிகைத் தோட்டத்தில் அடித்துக்கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மட்டு அம்பாறை மாவட்ட தமிழீழ காவல் துறையினர் புலனாய்வு மேற்கொண்டதன் காரணமாகவே இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தமிழீழ காவல்துறையினர் தெரிவித்தனர். (க)


## சிறு விளம்பரம்

ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவ சக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்ததிகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்து கொள்ள தொடர்புகளுக்கு,

பிள்ளையார் இன்
அறை இல - 09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 - இரவு 8.30 வரை

(C-9567)

## பிரத்தியேக கணனிப்பயிற்சி வகுப்புகள்

இந்தியாவிலிருந்து வந்திருக்கும் கணனி விரிவுரையாளரினால், Gisual Basic, C, C++, Hard Ware, DTP, M.S Office ஆகிய பயிற்சிகள் பிரத்தியேகமாக வழங்கப்படும்.

B.Sureshkumar,
Near Bank of Ceylon
Chankanai,
T.P- 077-6176476

(C-9568)


# 29 பாடசாலைகளை மீளமைக்க அரசு நோர்வேயுடன் ஒப்பந்தம்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அழிப்பேரலையால் சேதமடைந்த பாடசாலைகளின் மீள் கட்டுமானப் பணிகளை பொறுப்பேற்றுள்ள 14 தொண்டர் நிறுவனங்களில் இதுவரை ஒரேயொரு நிறுவனமே நிர்மாணப்பணிகளைத் தொடங்கியுள்ளது.

உள்நாட்டைச் சேர்ந்த 2 தொண்டர் நிறுவனங்களும், 12 சாவதேச தொண்டர் அமைப்புக்களும் இந்த மீள் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் நோர்வே அகதிகள் சபை மட்டும் நேற்று கட்டட நிர்மாணவேலைகளை தொடங்கியது.

கடந்த வெள்ளிக்கிழமை கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் இதற்கான தொடக்க நிகழ்வு நடைபெற்றது.

நோர்வே அகதிகள் சபையின் செயலாளர் நாயகம் ரேமண்ட் ஜோன்சன் மற்றும் அந்நாட்டின் நன்கொடையாளர்களில் ஒருவரான பி.ஸ்ரோ அலேன் ஆகியோர் வருகை தந்து புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினர்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ஜெய்னுலாப்டீன் உட்பட கல்வித் திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய நோர்வே அகதிகள் சபையின் செயலாளர் நாயகம் ரேமன்ட் ஜோன்சன்,

நோர்வே நாட்டின் செல்வந்தர்கள், கொடையாளிகளின் உதவியுடன் இந்த வேலைத்திட்டத்தை தாம் ஆரம்பித்துள்ளதாகக் கூறினார்.

இலங்கையில் 29பாடசாலைகளை மீள கட்டியெழுப்ப அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கூடுத்லாக 10 பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. முலலைத்தீவு மாவட்டம்-7, அம்பாறை மாவட்டம்-6, திருகோணமலை மாவட்டம்-7 என மொத்தம் 27 பாடசாலைகள் பொறுப்பேற்கப் பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 123பாடசாலைகள் முழுமையாகவும், பகுதியாகவும் ஆழிப் பேரலையால் சேதமடைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# அமைச்சர் மங்களவுக்கு எதிராக ஐ.தே.க உரிமைமீறல் பிரேரணை

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் உரிமை மீறல் பிரேரணை பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகமான லங்கதீபவில் பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மைக்கேல் பெரேரா தெரிவித்ததாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

மங்கள சமரவீர பாராளுமன்றத்தில் இதைத் தெரிவித்தபோது பெரேரா சபையில் இல்லை. இச் செய்தி வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது குறித்து பெரேராவிடம் விளக்கம் கேட்டுள்ளார்.

அமைச்சரின் இப்பேச்சு குறித்து பாராளுமன்ற சபாநாயகரிடம் பெரேரா முறைப்பாடு செய்தார். அத்துடன் தாம் தெரிவிக்காத கருத்துக்களை தெரிவித்ததாக கூறிய அமைச்சர் மங்கள சமரவீர மீது உரிமை மீறல் பிரேரணை கொண்டு வரவேண்டும் என்றும் பெரேரா வலியுறுத்தினா.

பொதுக்கட்டமைப்பைப் பொறுத்தவரையில், அதை நாம் ஆதரிக்கத்தயார். ஆனால் அதன் உள்ளடக்கத்தை முதலில் அரசு வெளிப்படுத்த வேண்டும என்பதே எமது ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்றும் பெரேரா விளக்கம் அளித்தார். (ற-4)

## பற்சிகிச்சை கதிரை

(பொன்னாலை)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் பற்சிகிச்சை ஆரம்பிக்க வசதியாக பற்சிகிச்சைக் கதிரை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வெகு விரைவில் பற்சிகிச்சையை ஆரம்பிக்க வசதியாக பல் வைததியர் ஒருவர் கடமைபுரிய அங்கு நியமிக்கப்படவுள்ளா என யாழ் பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (க-49)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

மொறட்டுவப் பல்கலைக் கழகத்தின் 'தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி - 2005/2006 மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருட கால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இரண்டு வருட படிப்பையும் ஒருவருட தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கிய இத் தொழில் நுட்பவியற் தேசிய டிப்ளோமா கற்கைநெறியானது ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 24வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளபபடும் கடைசித் திகதியன்று 20 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்கு கப்பற்றுறைக் கல்வித் தொழில் நுட்பவியல் பாடநெறிக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஏதாவது பல்கலைக்கழகத்திலோ கல்வி அமைச்சின் கீழ் வரும் உயர் கல்வி நிறுவனத்தினாலோ பதிவு செய்து கொண்டுள்ள முழுநேர மாணவர்கள் தேசிய தொழில் நுட்பவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கவோ பதிவு செய்து கொள்ளவோ தகுதியற்றவர்கள்.

விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க.பொ.த(உ/த) பாட்சையில இணைந்த கணிதம் உயர் கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய 4 பாடங்களில் 3பாடங்களேனும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் பூர்த்தியாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு க.பொ.த(உ/த) சான்றிதழ், க.பொ.த (உ/த) இசற்-மதிப்பீடு, பாடசாலைவில கற் சானறிதழ், பிறப்புச சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களின் பிரதிகளுடன் அனுப்பப்படவேண்டும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் "என்டிரி அனுமதி 2005/2006" எனக் குறிப்பிடப்பட்டு "பணிப்பாளர் தொழில் நுட்பவியல் நிறுவனம் மொறட்டுவை பல்கலைக்கழகம், கட்டுப்பெத்தை, மொறட்டுவை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். (க-5)

# செம்பியன் செல்வனின் இறுதிக் கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த 20ஆம் திகதி சுகவீனம காரணமாக மரணமான நாட்டுப் பற்றாளர் பெருமிகு கலை இலக்கியப்படைப்பாளி ஆறுமுகம் இராஜகோபாலின் (செம்பியன் செல்வனின்) இறுதிக் கிரியைகள் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிக் கிரியை நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, செம்பியன் செல்வனின் பூதவுடலுக்கு தமிழீழத் தேசியக் கொடியினை போர்த்தி கௌரவித்தார். பின்னர் புதுவை இரத்தினதுறை மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

மேலும் இவ் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமனற உறுப்பினர் சிவாஜிலிங்கம, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த.பஞ்சலிங்கம், பொன்.பூலோகசிங்கம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சிவச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழ சமூகவியல் பேராசிரியர் சண்முகலிங்கம், தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சிறில் மற்றும் எழுத்தாளர்களும் இரங்கல் உரை ஆற்றினார்கள்.

இறுதியில் அன்னாரின் பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. (க-19)

# சுனாமியினால் 103 பிள்ளைகள் பெற்றோரை இழந்துள்ளனர்

(தென்மராட்சி)

சுனாமி பேரலையின் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எட்டு பிரதேசங்களில் 103 பிள்ளைகள் தமது தாய் மற்றும் தகப்பன்மார்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனா எனத் தெரியவருகின்றது.

இந்த வகையில் 45 பிள்ளைகள் தாய்மார்களை இழந்த நிலையிலும், 29 பிள்ளைகள் தகப்பன்மார்களை இழந்த நிலையிலும், மேலும் 29 பிளளைகள் தாய்மார்களையும், தகப்பன்மார்களையும் இழந்த நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலையில் மருதங்கேணியில் 38 பிள்ளைகளும், நல்லூரில் இரண்டு பிள்ளைகளும், சாவகச்சேரியில் 5 பிள்ளைகளும், கரவெட்டியில் 3 பிள்ளைகளும் பருத்தித்துறையில் 43 பிள்ளைகளும், யாழ்ப்பாணத்தில் 8 பிள்ளைகளும், தெல்லிப்பளையில் 3 பிள்ளைகளும் சண்டிலிப்பாயில் ஒரு பிள்ளையும் இருக்கின்றனர்.


இத்தகைய பிள்ளைகளை இவர்களின் உறவினர்களே இதுவரையும் பராமரித்து வருகின்றனர் என்றும் தெரியவருகின்றது. (க-16)

## நேர்முகப் பரீட்சை

(பொன்னாலை)

காணி, பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (க-49)

# திராட்சை விதைகள் அல்சரைக் குணப்படுத்தும்?



திராட்சைப் பழங்களைச் சாப்பிடும் போது அதனுள் இருக்கும் விதைகளைச் சாப் பிடாமல் கீழே துப்பிவிடுகிறோம். ஆனால் வீணாகத் துப்பும் விதைகளில'ருந்து எடுக் கப்படும் கூட்டுப் பொருள் வயிற்றுப் புண்ணை (அல்சர்) குணப்படுத்தும என்கிறார்கள் ஆய் வாளர்கள்.

வழக்கம் போல திராட்சைப் பழ விதை களிலிருந்து தயாரிக்கப்பட்ட கூட்டுப் பொருள் அல்சரால் பாதிக்கப்பட்ட எலிகளுக்குக் கொடுக கப்பட்டது.

அப்போது இரைப்பையில் அளவுக்கு மீறிச் சுரக்கும் இரைப்பை நீர்அளவு குறைந்தது தெரிந்தது (இந்த நர் அளவுக்கதிகமாக இருக்கும்போது வயிற்றுத் திசுக்களுக்கு எரிச சல் ஏற்படுத்தி, அவற்றை நாளடைவில் சேதப் படுத்தும்). மேலும் அல்சர் அளவும் சுருங்கி விடுகிறது. இது தவிர, அல்சர் பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரிப்பதால் அல்சர் புண்கள் குணமாக ஆரம்பிக்கும்.

எனினும் திராடசை பழ விதைகளைச் சாப்பிட்டால் அல்சர் குணமாகும் என்று சொல் லும் அளவுக்கு விஞ்ஞானிகளுக்கு இன் னும் ஆதாரம் கிடைக்கவிலலை. அதேசமயம் தொடர்ந்து நடந்துவரும் ஆய்வுகளில் இதற் கான உறுதியான ஆதாரங்கள் நிச்சயம் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின் றனர்.

# நெடு நாள் மன அழுத்தம் மூளையைப் பாதிக்கும்



அளவுக்கதிகமான மன அழுத்தத்துடன நண்ட நாள் வசிப்பவர்களுக்கு மூளைப் பாதி ப்பு உண்டாகும் என்று மருத்துவ வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

மன அழுத்தம் காரணமாக கார்டிசோல (Cortisol) என்று குறிப்பிட்ட ஹார்மோன்களின் சுரப்பு அதிகரிப்பதாகவும், இந்த ஹார்மோன் கள் இருதய நோயகளை அதிகரிப்பதுடன், வேறு சில பிரச்சினைகளுடனும் தொடர்பு கொண்டிருப்பதாக ஏற்கனவே நடந்த ஆய்வு களில் கண்டறியப்பட்டது. இந்நிலையில் மன அழுத்த ஹார்மோன் கள் மேற்படி பாதிப்புக ளோடு நன்றுவிடாமல் மூளையைச் சுருக்கிவிடும் என்று புதிதாக நடந்த ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது.

கார்டிசோல் அதகமாகக் காணப்படும் வயது வந்தவர்கள் நினைவாற்றலைப் பொறு த்தமட்டில் மோசமாக இருந்தனர். அதாவது நினைவாற்றலுக்குப் பொறுப்பான ஹிப்போ கேம்பஸ் என்று குறிப்பிட்ட பகுதி சின்ன தாக இருந்தது.

மன அழுத்தம் என்பது நமது தின சரி வாழ்க்கையில் பல வடிவங்களில் வருகிறது. மன அழுத்ததில் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்கள் இரத்த அழுத்தம், இருதய நோய் கள் எனப் பல்வேறு உடல் பாதிப்புகளை ஏற் படுத்துகிறது. ஆனால் உண்மையில் மன அழுத்தம் உடலளவில் ஏற்படும் பாதிப்புகளை விட மூளை அளவில் பெரிய பாதிப்புகளை ஏற் படுத்துவதாக இந்த ஆய்வு மூலம் தெரிகிறது.

# ஒரு நாளுக்கு ஒரு இலட்சம் முறை துடிக்கும் இருதயம்



இருதயம் என்ன வேலை செய் கிறது? எப்படித் துடிக்கிறது? என் பதைத் தெரிந்து கொண்டால் ஆச்ச ரியத்தின் உச்சிக்கே சென்றுவிடுவீ கள். நாம் தரைத் தளத்தில் இருந்து மாடியில் உள்ள தண்ணீர் டாங்குக்கு தண்ணீரை எடுத்துச் செல்ல மின்சார மோட்டாரைப் பயன் படுத்து கிறோம் அல்லவா? அப்படித்தான் இருதயமும். அது ஒரு 'பம்ப்' பாக இயங்குவதால்தான் நம் இரத்தக் குழாய்களில் நாளொன்றுக்கு, ஒரு மனிதன் உடம்பில் 7500 லீற்றர் இரத்தம், உடலில் எல்லாப் பாகங்களுக்கும் செல்கிறது.

அப்படி வரும் இரத்தத்தின் மூலம் கிடைக்கும் ஒக்சிஜன்தான் இருதயம் இயங்க முக்கியமானது.

இருதயம் பற்றி சில முக்கிய தகவல்கள்:

- 70-100 ஆண்டுகள் வரை மனிதனின் வாழ் நாளுக்கு ஏற்ப, உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்ப விடாமல் இயங்குகிறது இருதயம்.
- ஒரு நாளுக்கு ஒரு இலட்சம் இருதய துடிப்பு ஒரு மனிதனிடம் ஏற்படுகிறது.
- இப்படி இருதய துடிப்புகளுக்கு இடையே மிகச்சிறிய இடைவெளி ஏற்படுகிறதே, அப் போதுதான் இருதயத்துக்குக் கிடைக்கும் ஓய்வு. மற்றபடி துடிப்பு நிற்கவும் கூடாது. இரத்த ஓட்டமும் நிற்கக்கூடாது.
- இப்படி துடிப்புகளுக்கு இடையே கணக் கிடப்படும் ஓய்வு நேரத்தைக் கணக்கிட் டால், ஒரு நாளைக்கு இருதயம் என்ற பம்ப் ஆறு மணி நேரம் ஓய்வெடுக்கிறது.
- இருதயத்துக்கு ஓய்வு கொடுக்க வேண்டு மானால், அதன் 'சுவிட்சை' சிறிது நேரம் நிறுத்தி வைக்கவேண்டும். ஆனால், இருத யத்தை அப்படிச் செய்ய முடியாது. அதனால் தான் மனிதனைப் படைக்கும்போதே, இயற் கையாக, இருதயத்துடிப்புகளுக்கு இடையே ஓய்வு எடுத்துக்கொள்ளும் வகையில் இரு தயம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்படி நிறைய ஆச்சரியங்களைக் கொண் டதுதான் இருதயம்.

ஆனால், அப்படிப்பட்ட 'தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும்' தானியங்கி இருத யத்தை நாம்தான், கண்டதைச் சாப்பிட்டும், கண்டபடி வாழ்க்கை முறையை மாற்றியும், அதில் கோளாறு காணச் செய்துவிடுகிறோம்.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 62

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



முன்னணி கதாநாயகர்க ளில் ஒருவரான தனது அண்ண னைப் பின்பற்றி திரையுலகிற் குப் பிரவேசித்திருக்கும் இவர் 'கற்க...' படத்தின் கதாநாயகன். இவரை உங்களுககுத தெரிந் தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 31ஆம் திக திககு முனன் கிடைககக் கூடி யதாக அனுபபிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 62**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர் களில மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவு செய்யபபடடு பரிசு வழஙகப்படும்.


பரிசுபெறும் அதிஷ்டசாலி கள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற் றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசப் போட்டி இல:-62**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-.............................. |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-.............................. |
| அனுப்புபவரின் முகவரி | :-.............................. |
| | .............................. |
| | .............................. |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 60**
**சரியான விடை**





**நடிகா பாண்டியராஜன்**

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 60இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :~ | S.சுஜாதா<br>வடலித்தோட்டம்<br>தம்பசிட்டி. |
| இரணடாம் பரிசு | :~ | து.நக்கீரன்<br>கே.கே.எஸ். வீதி,<br>மல்லாகம். |
| மூன்றாம் பரிசு | :~ | சு.நிறோஜன்<br>ஏழாலை மேற்கு,<br>ஏழாலை. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

தெ.கலைச்செல்வன், யாழ்ப்பாணம். லோ.அபிராமி, வல் வெட்டி. வே.கஜன், கோப்பாய். இ.சாந்தா, மட்டுவில். T.கோவிந் தன், இருபாலை. V.உஷா, தெல்லிப்பளை. மா.சாவித் தரி, உடுவில். தெ.ஆர்த்தி, சாவகச்சேரி. வ.உமா, கொக்கு வில். தா.சந்தியா, புலோலி. இ.அருந்ததி, யாழ்ப்பாணம். த.குமுதா, நீர்வேலி. வி.ரகுவரன். திருநெல்வேலி. வே.சுபா ஷினி. மானிப்பாய். T.தர்ஷினி, தம்பசிட்டி. யோ.சிவாஜினி, சாவகச்சேரி. வி.இளங்கோ, கோப்பாய், சு.விதுஷன், வண் ணாபண்ணை. K.ராகவி, உடுப்பிட்டி. சொ.நித்தியா, கொக்கு வில். க.விஜி, நாவாந்துறை. ச.கஜசங்கவி, உடுவில். மோ.சர் மிளா, இணுவில். லோ.வித்தியா, மானிப்பாய். N.தரன், கொக்குவில். ஜெ.மதன், சுதுமலை. S.மதுஷா, கோண்டாவில. ம.அருனியா, காரைநகா். ஆ.ரகுராம், மருனார்மடம். இ.வாசுக, இணுவில். ம.ஜனா, உடுவில்.

# டெல்லி திரையரங்குகளில் குண்டுவெடிப்பு; ஒருவர் உயிரிழப்பு; 49 பேர் படுகாயம்!

(புதுடெல்லி)

டெல்லியில் நேற்றுமுன்தினம் இருபது நிமிட இடைவெளியில் 2 திரையரங்குகளில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. இதில் ஒருவர் உயிரிழந்தார். 49 பேர் படுகாயமடைந்தனர்

லிப்ட்டி, சதயம் ஆகிய இரண்டு திரையரங்குகளிலும் நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டன. சன்னி தியோல் நடித்த 'ஜோ போலே சோ நிகால்' என்ற திரைப்படம் சீக்கிய மக்களின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்தப் படம் பஞ்சாப் மாநிலத்தில் திரையிடப்படவில்லை. இத்திரைப்படத்திற்கு சீக்கிய அமைப்புகள் பலவும் கடும் எதிர்பபுத் தெரிவித்து வந்தன. இந்நிலையில் டெல்லியல் இத்திரைப்படங்கள் திரையிடப்பட்ட 2 திரையரங்குகளிலும் நேற்றுமுன்தினம் இரவு குண்டு வெடித்தது. இதில் படுகாயமடைந்த ஒருவர் மருத்துமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். 49 பேர் படுகாயம் அடைந்தனர். இதையடுத்து டெல்லியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

டெல்லி உள்ளிட்ட சில இடங்களில் இந்தப் படம் திரையிடப்பட்டுள்ள திரையரங்குகளில் இரவுக் காட்சிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டன. மேலும் மும்பையிலும் இந்தப் படம் திரையிடப்பட்டிருந்த திரையரங்குகள் நேற்றுமுன்தினம் மூடப்பட்டன. சென்னையிலும் இத திரைப்படங்கள் ஓடும திரையரங்குகளில் நள்ளிரவில் இருந்து பலத்த காவல்துறை பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (ற)

# 7 மாணவிகள் நீரில் மூழ்கி மரணம்

தென்னாபிரிக்காவில் நீச்சலில் ஈடுபட்டிருநத 7 மாணவிகள் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர். மேலும் 8 பேரைக் காணவில்லை.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் காணாமல் போனவர்களைத் தேடி தற்சமயம் முழுவீச்சில் தேடுல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 300 மாணவ மாணவிகள் தமது ஆசிரியர்களுடன் கடலில் நீச்சலில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ற-2)

# எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் மறு அளவை செய்யும் பணி

(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த 24 மலையேறும் வீரர்கள், விஞ்ஞானிகள் இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி வெற்றி கண்டனர். எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை அவர்கள் துல்லியமாக அளக்க உள்ளனர்.

உலகம் உஷ்ணப்படுவதால் இமய மலைப்பகுதியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து சீன விஞ்ஞானிகள் விரிவாக ஆராயவுள்ளனர்.

சீன மலையேறும் கோஷ்டியினரும், விஞ்ஞானிகளும் எவரெஸ்ட் சிகரத்தின உச்சியில் 77நிமிடம் கழித்தனர். உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தை மறு அளவை செய்யும் பணியில் நவீன சாதனங்களுடன் அவர்கள் ஈடுபட்டனர்.

எவரெஸ்ட் சிகரம் முதன் முதலாக 1975ஆம் ஆண்டில் சீனர்களால் அளக்கபட்டது. கடல் மட்டத்திற்கு மேலே அந்த சிகரத்தின உயரம் 8848.13மீற்றர் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

2.5மீற்றர் நீளமுள்ள சர்வே கருவி மற்றும் செயற்கைக்கோள் தொடர்பு கருவியை அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தின உச்சியில் பொருத்தினர். சிகரத்தின் மீது உள்ள பனியின் அடர்த்தியை அளவுடு செய்ய ரேடார் கருவியையும் சீன விஞ்ஞானிகள் பயன்படுத்தினர். எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை அளக்கும் பணி இன்னும் இருநாட்கள் நடக்கும் என பீஜிங்கில் சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவரெஸ்ட்சிகரத்திற்கு சீனப்பெயர் மவுண்ட்கோமோலாங்மா என்பதாகும்.

இந்தச் சிகரம் சீன-நேபாள எல்லையில் அமைந்துள்ளது.

சிகரத்தின் துல்லியமான உயரம் அறிவிக்கப்படும்போது சிகரத்தை மூடியுள்ள ஐஸ்கட்டிகள், பனிப்படலம் ஆகியவற்றின் அடத்தி கழித்துக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும என சீனாவின் சின்குவா செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

தற்போது மிகவும் நவீனமாக கருவிகள் பயன்படுத்தி எவரெஸ்டின் உயரத்தை அளக்கிறார்கள். 1975இல் அளக்கும் போது டிரிக்னோமெட்டிரிக் முறையே பயன்படுத்தப்பட்டது. எவரெஸ்ட் சிகரம் 60மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக உருவானதாகும். ஆண்டுக்கு 10 மில்லிமற்றர் உயரம் அது வளர்ச்சி அடைவதாக விஞ்ஞானிகள் சொல்கின்றனர். ஆனால் வேறு சில விஞ்ஞானிகளோ எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் குறைந்து வருவதாகவும் சொல்கின்றனர்.

இந்த சிகரத்தின் உயரம் தொடர்பாக சர்வதேச விஞ்ஞானிகள் மத்தியில் பல ஆண்டுகளாகவே விவாதம் நடந்து வருகிறது. 1999இல் அமெரிக்க ஆய்வுக்குழு ஒன்று எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8850மீற்றர் எனத் தெரிவித்தது. (ற)

# ரஷ்யாவில் அப்துல்கலாம் புடினுடன் இன்று சந்திப்பு

(மொஸ்கோ)

இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் ரஷ்யா, சுவிற்சர்லாந்து, ஐஸ்லாந்து, உக்ரேன் ஆகிய 4நாடுகளில் 14நாள் சுற்றுப பயணம் செய்கிறார்.

தனி விமானத்தில் ரஷ்ய தலைநகர் மொஸ்கோ சென்றடைந்த அப்துல்கலாமுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முப்படைகளின் அணிவகுப்பையும் அவர் பார்வையிட்டார். வரவேற்பு நிகழ்ச்சியில் ரஷ்ய நிதி மந்திரி அலெக்சகுர்தின் கலந்து கொண்டார். ரஷ்யாவில் 3 நாள் தங்கி இருக்கும் அப்துல்கலாம் இன்று ரஷ்ய அதிபர் விளாடிமின் புடினை சந்தித்துப் பேசுகிறார்.

இருநாடுகளுக்கு இடையே பாதுகாப்பு தொழில் நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புத் தொடர்பாக அவர்கள் பேச்சு நடத்துவர்.

இந்தியா-ரஷ்யா கூட்டு தயாரிப்பில் உருவான 'பிரம்மாஸ்' ஏவுகணை தயாரிப்புக்கு ஒத்துழைத்த விஞ்ஞானிகளை அவர் சந்தித்துப் பேசுகிறார். அங்குள்ள கல்வி நிலையங்களுக்கும் அப்துல்கலாம் செலவார்.

ரஷ்ய சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு சுவிற்சர்லாந்து செல்லும் அப்துல்கலாம் 26ஆம் திகதி அறிவியல் தின நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார். மறைந்த விஞ்ஞானி ஐன்ஸ்டீன் வீட்டு அப்துல்கலாம் சென்று பார்வையிடுவார்.

ஐஸ்லாந்து செல்லும் அப்துல்கலாம் அங்கு ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்ப மையம், பூகம்ப எச்சரிக்கை மையத்தையும் பார்வையிடுவார்.

இறுதிக் கட்டமாக உக்ரேன் செல்லும் அவர் அந்த நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்தும் பேசுவார். (ற)

# சிலியில் பனிப்பாறை சரிந்து 45 இராணுவ வீரர்கள் பலி

சிலிநாட்டில் அன்டாஸ் மலைப்பகுதியில் பயிற்சி மேற்கொண்டிருந்த 45 இராணுவவீரர்கள் பனிப்பாறை சரிந்து விழுந்து பலியானார்கள்.

இறந்த வீரர்கள் அனைவரும் அண்மையில் இராணுவத்தில் சேர்க்கப்பட்ட மிக இளம் வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அர்ஜன்ரீனா நாட்டின் எல்லையில் அமைந்துள்ள அன்டாஸ் மலைப்பகுதி எரிமலை அபாயமும், பனிப்பாறை மிகுந்தும் காணப்படும் இடம். ஆதலால், அந்த இடத்தில் வீரர்களைப் பயிற்சி மேற்கொள்ள வைத்தமைக்காக இராணுவத்தின் மீது இறந்தவர்களின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தத் துயரச்சம்பவத்தினை அடுத்து அந்நாட்டில் 3 நாட்களுக்கு தேசிய அளவிலான துக்கம் அறிவிக்கபபட்டுள்ளது. (ற)

# திரைப்படத்தை வெளியிட முடியாததால் ஆந்திர எம்.எல்.ஏ தற்கொலை முயற்சி

ஆந்திர சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பலகோடி ரூபா செலவில் தயாரித்த திரைப்படத்தை உரிய நாளில் வெளியிட முடியாததால் மனமொடிந்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

20 கோடி ரூபா செலவில் 'ஜூனியர் எம்.ஜி.ஆர்' என்றழைக்கப்படும் பிரபல ஆந்திர நடிகரொருவர் நடித்த நாரசிம்மலு என்ற படத்தைத் தயாரித்த எம்.எல்.ஏ. செங்கல கிருஷ்ணராவ பைனான்சியர்கள். மற்றும் திரையரங்கு உரிமையாளாகளுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக படத்தை திட்டமிட்டபடி நேற்றுமுன்தினம் வெளியிட முடியவில்லை. இதனால் மனமுடைந்த அவர் ஹைதராபாத்துக்கும் குடும்பத்தினருடன் காரில் சென்று கொணடிருக்குமபோது, திடீரென்று கிருமி நாசியியைக் உட்கொண்டார். அவரது செயலைக் கண்டு அதிச்சியடைந்த குடும்பத்தினர் கூக்குரலிட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் அவரை மருத்துவமனைகது எடுத்துச் சென்று எம்.எல்.ஏயின் உயிரைக் காப்பாற்றினார்கள்.

மருத்துவமனையில் அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. எம்.எல்.ஏயின் தற்கொலை முயற்சி தெலுங்குத் திரைப்பட மற்றும் அரசியல் வடடாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது செயலால் தான் சார்ந்துள்ள தெலுங்கு தேசம் கட்சிக்கு அவமானம் ஏற்படாதிருக்க தனது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்யப்போவதாக செங்கல கிருஷ்ணராவ் தெரிவித்துள்ளார். (து)

# அதிபராகும் எண்ணம் இல்லை

## -லிபிய அதிபரின் மகன் சைபல்

(அம்மான்)

தந்தைக்கு பிறகு அதிபராகும் எண்ணமில்லை என்று லிபியா அதிபர் கடாபியின் மகன் சைபல் அல்இஸ்லாம் கடாபி அறிவித்துள்ளார்.

ஜோர்டான் அதிபராக மும்மர் கடாபி உள்ளார். கடந்த 1980ஆம் ஆண்டு லிபியா தாக்கப்பட்டது.

அதன் பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் அதிபர் கடாபி மோதல் போக்கை கையாளத்துவங்கினார்.

அவரது மகன் திரைமறைவாக செயல்பட்டு கடாபியை சமாதானப்படுத்தி அந்நாடுகளுடன் மீண்டும் உறவைப் புதுப்பிக்க வழி வகுத்தார். இழப்பீடுகளையும் பெற்றுத் தந்தார்.

உலகப் பொருளாதார மையம் சார்பல ஜோர்டானில் கருத்தரங்கு நடந்தது. அதில் இஸ்லாம் கடாபி பேசியதாவது, என் தந்தைக்குப் பிறகு அதிபர் பதவிக்கு வரும் எண்ணம் எனக்கில்லை.

சில வேளைகளில் முற்போக்கு சிந்தனையுடன் விரைந்து செயல்படும் வழக்கம் எனக்குள்ளது. லிபியாவில் நான் பிரபலமான நபரும் அல்ல.

மக்கள் என்னை அதிபராக ஏற்பார்கள் என்று நான் கருதவில்லை. நானும் என் தந்தையும் இது பற்றி பேசியதில்லை. என்னை அரசியல் வாரிசாக உருவாக்க அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

எண்ணெய் வளம் மிகுந்த லிபியாவுக்கு அமரிக்காவுடன் உறவு சீரடைந்து வருகிறது. விரைவில் தூதரக உறவுகள் ஏற்படும என நம்புகிறேன்.

அமெரிக்காவும் லிபியாவும் நல்ல நண்பர்களாக இல்லாமல் இருந்திருக்கலாம். இரு நாடுகளும் எதிரிகள் அல்ல இவ்வாறு இஸ்லாம் கடாபி பேசினார். (ற)

# பீர் கோப்பையுடன் விநாயகர்; அமெ. நிறுவனம் மீது வழக்கு

(வோஷிங்டன்)

விநாயகர் பீர் கோப்பையுடன் இருப்பது போல் சித்தரித்திருந்த அமெரிக்க நிறுவனம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள தனியார் மதுபான நிறுவனம் தன்னுடைய பீர் போத்தலில் விநாயகர் உருவத்தைப் பயன்படுத்தியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அந்த நிறுவனத்தின் பீர் போத்தல்களில் விநாயகர் உருவம் பொறித்த லேபிள் ஒட்டப்பட்டுள்ளது. இண்டிகா இந்தியா என்ற பெயரில் பீர்போத்தல்களில் ஒரு கையில் பீர் கோப்பையும், துதிக்கையில் மற்றொரு பீர் கோப்பையும் விநாயகர் வைத்திருப்பது போல சித்தரிக்கப்பட்டுள்ளது.

இது அமெரிக்க வாழ் இந்துக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்துக் கடவுள் கையில் பீர் கோப்பையுடன் இருப்பது போல எப்படி சித்தரிக்கலாம் என்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, அந்த அமெரிக்க நிறுவனத்துக்கு எதிராக அமெரிக்க வாழ் இந்தியரான பிரிஜ்தீர் வழக்குத் தொடர்ந்துள்ளார். இதற்கிடையே அந்த அமெரிக்க நிறுவனமும் அந்த லேபிலை வாபஸ் பெற்றுள்ளது. (ற)

# பிரித்தெடுக்கப்பட்ட இரட்டையர்கள்

இந்தோனேஷியத் தம்பதியர் சாபரி - ஹார்மனிக்கு பிறந்த இரட்டைக் குழந்தைகள் பிரித்தெடுக்கப்பட்டனர். இத் தம்பதியினருக்கு கடந்த பதினைந்து மாதங்களுக்கு முன் இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன.

இந்தக் குழந்கைளின் இடுப்புப் பகுதி ஒன்றோடு ஒன்று ஒட்டி இருந்தது. மூன்று கால்கள் மட்டுமே இருந்தன.

இந்தக் குழந்தைகளைப் பிரித்தெடுக்க சிங்கப்பூர் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை நடந்தது. 10 மணி நேர சத்திரசிகிச்சைக்குப் பிறகு குழந்தைகள் பிரித்தெடுக்கப்பட்டன. இந்தக் குழந்தைகள் தொடர்ந்தும் உயிரோடு இருக்குமா என்பது குறித்து எதுவும் கூறமுடியாதென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு -குறள்

வலம்புரி

# ஆட்சியை தக்கவைக்க ஜெயலலிதாவின் சதி

தன்னைக்கொலைசெய்வதற்கு விடுதலைப் புலிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதர்க தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் தொகுதிகளில் இடைத் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர், ஜெயலலிதா எழுதிய முதல்கடிதம் இதுவாகவே இருக்கும். தன்னைக் கொலைசெய்வதற்கு தற்கொலைப் படையணியைச் சேர்ந்த பெண்ணொருவர் வெடிகுண்டுடன் தமிழகத்திற்கு வந்துள்ளதாக உள்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதிய தமிழக முதல்வரிடம் இருக்கக்கூடிய உள்நோக்கம் இதிலிருந்து புலப்படுகிறது.

அதாவது தற்கொலை குண்டுதாரி தமிழகத்திற்குள் நுழைந்துள்ளார் எனக் குறிப்பிடும் முதல்வர் ஜெயலலிதா காஞ்சிபுரத்திலும், கும்மிடிப்பூண்டியிலும் தொடர் பிரசாரத்தை மேற்கொண்டிருந்தார்.

கலைஞர் கருணாநிதியை எப்பாடுபட்டும் தோற்கடிக்கவேண்டும் என்பதற்காக பல்வேறு திருகுதாளங்களை ஏற்பாடுசெய்த ஜெயலலிதாவுக்கு, அப்போது மட்டும் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை பற்றிய பயம் இருக்கவில்லை. ஆனால் தேர்தல் நடந்து ஒருசில தினங்களுக்குள் அதிரடியான அறிக்கையை அவர் வெளியிட்டதற்குக் காரணம் இருக்கவே செய்கிறது.

அதாவது நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க கூட்டணியே தமிழகத்தின் அனைத்து ஆசனங்களைம் பெற்றிருந்தது. இந்திய மத்திய அரசைத் தீர்மானிப்பதில் தி.மு.கூட்டணியே முதன்மையான கட்சியாக தற்போது விளங்குகின்றது.

பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஆதரவளித்த ஜெயலலிதா படுதோல்வியைக் கண்டதும், பாரதீய ஜனாதாக்கட்சி எதிர்க்கட்சியாக மாறியதும் தனது முதல்வர் பதவிக்கு ஆபத்து என்பதை ஜெயலலிதா உணர்ந்துகொண்டார்.

தி.மு.க கூட்டணியின் ஆதரவில் இயங்குத் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு சிலவேளை தமிழக ஆட்சியில் குறைகண்டு கலைத்துவிட முயற்சிக்கலாம் என்ற பயம் ஜெயலலிதாவுக்கு நிறையவே உண்டு.

இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான உபாயத்தை அமைத்துக்கொள்வதற்காக விடுதலைப் புலிகளை வலிந்து இழுத்துள்ளார் அவர்.

மத்திய அரசு தமிழக ஆட்சியை கலைத்தால் தனக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பு வலுவிழந்து போகும். இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக தனக்கு விடுதலைப் புலிகளால் கொலை பயமுறுத்தல் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி தனக்குப் பிரச்சினை இருப்பதாக பகிரங்கப்படுத்தி அதன்மூலம் மத்திய அரசின் நடவடிக்கையைத் தடுப்பதே ஜெயலலிதாவின் உள்ளார்ந்த நோக்கமாகும்.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு கொலைகள் நடந்துள்ளன. முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா வீதியால் நடந்துசென்றவேளை வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

இவ்விதம் தமிழ்கத்தில் நாளுக்குநாள் நடக்கின்ற பயங்கரப் படுகொலைகளையெல்லாம் கண்டும் காணாததுபோல் இருக்கும் ஜெயலலிதாவுக்கு விடுதலைப் புலிகளின் தற்கொலை படையணியைச் சேர்ந்த பெண்போராளி குண்டுடன் நுழைந்திருப்பது மட்டும் எப்படித் தெரிந்தது!

அவ்வாறு குண்டுடன் தமிழகத்திற்குள் நுழைந்த போது முதல்வர் ஜெயலலிதாவின் மரியாதைக்குரிய தமிழகப் பொலிஸார் என்ன செய்துகொண்டிருந்தனர்!

இவ்வாறு பல கேள்விகள் மக்களிடம் எழுந்தாலும், அந்தக் கேள்விகளை அவரிடம் கேட்கவேண்டிய பொறுப்பு மத்திய உள்துறை அமைச்சருக்கே உண்டு.

எதுவாயினும் தமிழக மக்களையும், ஈழத் தமிழர்களையும் பிரித்து, சுயலாபம் ஈட்டும் ஜெயலலிதாவின் முயற்சி தமிழினத்திற்கு செய்யும் பெரும் துரோகத்தனமாகும். கடந்த காலங்களில் நடந்த துரதிர்ஷ்டவசமான சம்பவங்களினால் வலுவிழந்துபோயுள்ள தமிழகத்து சகோதரர்களின் உறவு மீளவும் கட்டியெழுப்பப்படும் சூழ்நிலையில், விசமத்தனமான தகவல்களை பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும். அதுவே தமிழினத்திற்குச் செய்யும் உதவியாக இருக்கும்.

# பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசுக்கு புரிந்துணர்வு இல்லை

## -ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சுனாமி புனரமைப்பு பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு தெளிவான ஒரு புரிந்துணர்வு இல்லையென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



மாத்தளை பிரதேசத்திற்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொணடபோது அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துளளாா.

அரசின் பங்காளிகளிடம் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக பரஸ்பரம் எதிர்ப்பான கருத்துக்கள் நிலவுவதினாலேயே அரசாங்கத்திடம் ஒரு தெளிவான ஒரு புரிந்துணர்வு இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கூறுகின்றார். இதனை செயற்படுத்தாவிட்டால் புனரமைப்பு வேலைகளை செய்ய முடியாது.

நாட்டின் சமாதானத்துக்காக பொதுக்கட்டமைப்புத் தேவை. யார் எதிர்த்தாலும் தனது உயிரைப் பணயம் வைத்தாவது பொதுக்கட்டமைபபை ஏற்படுத்துவேன் என ஜனாதிபதி கூறுகின்றார்.

இதனை ஒவ்வொரு நாளும் கூறிக்கொண்டு செல்கின்றார் அவர். இவ்வாறு தைரியமாகப் பேசுகின்றார் ஜனாதிபதி. ஆனால பொதுக் கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவதாகத் தெரியவில்லை. பொதுக்கூட்டமைப்பை நடைமுறைப்படுத்த எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்க மாட்டோம் என பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. தம்பட்டம் அடிக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு என்பது நாட்டைப் புலிகளுக்கு விற்கும் செயல் என்றும், அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் என்றும் ஜே.வி.பியினர் கூறுகின்றார்கள்.அதைவிட பொதுக் கட்டமைப்பு பற்றி எமக்கு ஒன்றும் தெரியாது என அரசாங்கம் கூறுகின்றது. என்றும் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்தார். (ற-8)

# அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர சமாதானத்தை உருவாக்குவோம்

## வெசாக்தினச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

சமத்துவமாகவும் அன்னியோன்யமாகவும் சகலரும் வாழக்கூடிய அதேவேளை சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கௌரவம்மிக்க சமாதானத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பௌதத தர்மத்தை பின்பற்ற வேண்டுமானால் இலங்கை உட்பட ஏனைய நாடுகளில் நிலவுகின்ற இனவாத மற்றும் சாதி வேறுபாடுகள் போன்ற பிரச்சினைகள் இருக்கக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்காலத்தில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட முரணபாடுகளுக்கு தீர்வு காணுவதற்கு, பௌத்த தர்மத்தை சிறந்த எடுத்துக்காட்டாக கொள்ளவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### பிரதமர்

இதேவேளை வெவ்வேறுகால கட்டங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக இந்த நாடு பின்தங்கியநிலையிலிருந்த போதிலும் இந் நாட்டு மக்கள் பௌத்த சமயத்திற்கு ஏற்ப செயற்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வெசாக் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த தர்மம் மற்றும் அதன் படிப்பினைகள் நவயுகத்திற்கு எந்தளவிற்கு பொருந்துகின்றது என்பதை சிந்திப்பது இன்றைய காலகட்டத்தில் சாலப் பொருந்துமென பிரதமர் தனது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு சிங்கள பௌத்த மக்கள் மாத்திரமல்லாமல் இந்து, கிறீஸ்தவ, இஸலாமிய மக்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க

கடந்த 500 ஆண்டுகளுக்கு முன்னர் அன்னியர்களின் ஆக்கிரமிப்புக்களினால் புரையோடிப்போன ஒழுக்க நெறிகளையும் மனிதாபிமான செயற்பாடுகளையும் மீளக்கட்டியெழுபபுதவற்கான காலம் எழுந்துள்ளதாக புத்தசாசன அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

பேரளவில் மாத்திரம் பௌத்தர்களாக அன்றி பௌத்தத்தின் கொள்கைகளுக்கு அமைய நடந்துகொள்வார்களாயின எந்தவொரு சமூக கட்டமைப்பிலும் பிரசசினைகள் ஏற்படாது எனவும் புத்தசாசன அமைச்சர் தெரிவித்துள்ளார். (கூ-9)

# மென்பந்து கிரிக்கெட் போட்டி

(சுண்டுக்குளி)

எச்.என்.பி. அசுரன்ஸ் நிறுவனத்தினால் திணைக்களங்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வந்த இருபது ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த 15 ஆம் திகதி யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியின விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் யாழ். தபாற்கந்தோர் அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச சபை அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நல்லூர் பிரதேச சபை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இவ்வணி 20 ஓவர்களில 5 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது. எஸ்.இராஜன் 38 ஓட்டங்களையும் ரி.ரொஷான் 28 ஓட்டங்களையும் ஏ.ரஜனி 19 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுததனர்.

பந்து வீச்சில் தபாற்கந்தோர் அணி வீரர்கள் ரி.ஜெயசசந்திரன், எஸ்.குணதாஸ், எஸ்.விமல், எம்.குணாநிதி, ஏ. நந்தன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தபாற்கந்தோர் அணி 15 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வெளிச்சம் போதாதெனக் கூறி ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

அதனால் போட்டிக் குழு இரு அணிகளும் இழந்த விக்கெட்டுகள், வீசிய ஓவர்கள், பெற்ற ஓட்டங்கள் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்த்து நல்லூர் பிரதேச சபை அணிக்கு வெற்றியைக் கொடுத்தது.

துடுப்பாட்டத்தில் தபாற் கந்தோர் அணி வீரர்கள் எஸ். குணதாஸ் 20 ஓட்டங்களையும் ரி.குணாநிதி 23 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் நல்லூர் பிரதேச சபை வீரர்கள் ஏ.ரஜனி, ரி.ரொஷான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இவ்வாட்டத்திற்கு நடுவர்களாக எம்.கிங்ஸ்லி, ரி.விக்ரம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (க-110)

# சுனாமியினால் வடமராட்சியில் 787 தொழில், வர்த்தக நிலையங்கள் சேதம்

## 409 கோடி ரூபா நட்டமெனவும் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரதேசத்தில் சுனாமிப் பேரலையின் காரணமாக பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி பிரதேசங்களில் 787 தொழில் வர்த்தக நிலையங்கள் சேதமடைந்தமையினால் மொத்தம் 409 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் பருத்தித்துறை பிரதேச செயலா் பிரிவில் 153 வர்த்தக நிலையங்களும் 108 சுயதொழில் நிறுவனங்களும், 253 ஏனைய தொழில் அமைப்புக்களுமாக மொத்தம் 512 தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 275 தொழில் சார் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டு சேதமடைந்துள்ளன.

இதனால் பருத்தித்துறை பிரதேசத்தில் சேதமாக 129 கோடி ரூபாவும், மருதங்கேணி பிரதேசத்தில் 280 கோடி ரூபாவும், நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் இவ் இரு பிரதேசங்களிலும் தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கையில ஈடுபட்டு தமது ஜீவனோபாயத்தினை முன்னிலைபபடுத்திய ஆயிரக்கணக்கானவர்கள் இன்றைய நிலையில் தொழில் வாய்ப்புக்கான உரிமைகள் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரியவருகிறது. (க-16)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பலமானகாற்று எழுந்தால் ஏரியின் நீர்ப்பரப்பின் மேல் மெல்லிய அலைகள் தோன்றுகின்றன. அப்படிப்பட்ட நிலையில் அந்த ஏரியில் சந்திரனின் பிரதிபிம்பத்தை நாம் தெளிவாகப்பார்க்க முடியாது. தெளிவான சலனமற்ற ஏரியின் நீரிலேயே நாம் சந்திரனின் தெளிவான பிரதிபிம்பத்தை பார்க்கமுடியும். அது போலவே நமது மனதிலும் ஆசை என்ற அலைகள் எழுமானால் அதில் ஆத்மாவின் பிரதிபலிப்பைக் காண முடியாது.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கையில் சமாதானம் ஏற்பட
# ஜே.வி.பியை ஓரங்கட்ட வேண்டும்
## தினமணி ஆசிரியர் தலையங்கம் ஆலோசனை

(சென்னை)

**இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியாவும், எதிர்க்கட்சியும் ஆதரவு காட்டுவது அவசியம் என்று தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணிப் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்திருக்கிறது.**

**இதன்மூலமே ஆட்சிக் கட்டமைப்பில் இருந்துகொண்டு தீவிரவாத சக்தியாகச் செயற்படும் ஜே.வி.பியைத் தனிமைப்படுத்த முடியும் என்றும் இலங்கையில் அமைதி ஏற்படுத்துவதற்கு இதுவே சிறந்த வழியென்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.**

**சந்திரிகாவின் திடத் தீர்மானமென்று தலைப்பிட்டு வெளியாகியிருக்கும் அந்த ஆசிரிய தலையங்கம் இங்கு அப்படியே தரப்படுகிறது.**

### சந்திரிகாவின் திடத் தீர்மானம்

இலங்கையில் சுனாமியால் பாதிப்புக் குள்ளான பகுதிகளுக்கு புனர்வாழ்வு அளிப் பதற்காக '2005 - இலங்கை வளர்ச்சிக் கான அரங்கு' என்ற நிறுவனம் அண்மை யில் கண்டியில் சுனாமி நிவாரணத்திற்காக இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளுக்கு சர்வதேச அரங்கில் நல்லபயன் விளைந் திருக்கிறது.

இப்புனரமைப்புப் பணிகளுக்காக ஜப் பான், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, அமெ ரிக்கா போன்ற நாடுகளும் உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி, ஐக்கிய நாடு கள் நிறுவனங்கள் போன்ற அமைப்புக் களும் கணிசமான நிதியுதவி புரிந்துள்ளன. 220 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான உதவித்தொகை கிடைத்துள் ளது. இதில் 195 கோடி டொலர் மானியமா கும்.

கண்டி நிகழ்ச்சியில் மேற்குறிப்பிட்ட நிதிநிறுவனங்களின் பிரதிநிதிகளும் அதி பர் சந்திரிகாவும் பங்குகொண்டிருந்தார்கள். இதில் கலந்துகொண்ட இந்தியத் தூதர் நிருபமாராவ் மிக முக்கிய கருத்தை வலி யுறுத்தியிருக்கிறார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட எல்லா சமு கங்களும் குறிப்பாக சிறுபான்மை இனங் களுக்கு புனர்வாழ்வை அமைத்துக்கொள் வதற்கான தாராள நிதிவசதிகளைச் செய்து தருவது அத்தியாவசியம் என்று ராவ் வற் புறுத்தியிருக்கிறார்.

இதைவிட ஈழத்தமிழர்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் சந்திரிகா பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

'ஈழத்தில் சுனாமி மீட்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக விடுதலைப் புலிகளு டன் இணைந்து இணக்கமான ஏற்பாட்டைச் செய்யும் அரசின் முடிவில் உறுதியூண்டி ருக்கிறேன். தீவிரவாதிகளின் அச்சுறுத் தைப் பொருட்படுத்தப்போவதில்லை' என்று கூறியதுடன் அதிபர் நிற்கவில்லை.

'என்னுடைய இத்திட்டம் பொருளாதார அமைதி' மற்றும் வளமான எதிர்காலத் திற்கு நாட்டைக் கொண்டுசெல்லக்கூடியது. தீவிரவாதிகளான சிறுபான்மைக் கூட்டம் இந்தப் பாதையில் குறுக்கிடுவதை அனு மதிக்கமுடியாதென்றும் எச்சரித்திருக்கிறார்.

அவர் இப்படிக் குறிப்பிடுவது, சிங்கள வெறிக்கட்சியும், சந்திரிகாவின். கூட்டர சில் இடம்பெற்றிருப்பதுமான ஜே.வி.பியைத் தான். ஜே.வி.பியினர் தமிழர்களை வெறுப் பவர்கள் மட்டுமல்ல, அவர்களை அந்நியர் களைப் போலவே நடத்துபவர்கள்.

அதோடு இலங்கையின் ஆட்சி சிங்கள அரசாக நடைபெறவேண்டுமென்ற வெறி கொண்டவர்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கூட்டாட்சிமுறையை அறி முகப்படுத்துவதையே முழுமூச்சுடன் எதிர்த்து வருபவர்கள்.

பலகாலம் இலங்கை அரசியலில் ஒரு மூலையில் கிடந்த இக்கட்சிக்கு திடீரென யோகம் அடித்தது. அது எப்படியென்றால், ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசி யக் கட்சியைத் தோற்கடிப்பதற்காக தேர் தலில் ஜே.வி.பியுடன் சந்திரிகா கூட்டணி அமைத்தார்.

அவருடைய எண்ணம் ஈடேறிவிட்டது. ஆனால், அதிலிருந்து புதிய தலைவலி ஆரம்பித்துவிட்டது. ஜே.வி.பியைச் சேர்த் துக்கொண்டு சந்திரிகா கூட்டரசு அமைத்த நாளிலிருந்தே அவருக்கு சோதனையும் ஆரம்பித்துவிட்டது.

அரசியல் ஆதாயத்திற்காக வன்முறை, தீவிரவாதக் கும்பல்களுடன் கூட்டுச்சேர் வது எவ்வளவு ஆபத்தென்பதை சந்திரிகா இப்பொழுது உணர்ந்திருக்கிறார். அது அவருடைய பேச்சில் வெளிப்பட்டிருக்கிறது.

'மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சில சந்தர்பங்களில் கடினமான ஆபத்தான முடிவுகளைக்கூட எடுக்கவேண்டியிருக்கும். இத்தகைய முடிவுகளை எடுப்பதால் எங்க ளில் சிலருடைய உயிருக்குக்கூட ஆபத்து நேரிடலாம்' என்று கூறுமளவிற்கு சந்திரிகா சென்றிருக்கிறார்.

இத்தருணத்தில் சந்திரிகாவின் முயற்சி களுக்கு இந்தியா மட்டுமன்றி, எதிர்க்கட் சியும் ஆதரவு காட்டுவது அவசியம்.

இதன்மூலம் ஜே.வி.பி 'தீவிரவாத சக் தியை தனிமைப்படுத்துவதுடன், இலங்கை யில் அமைதி மீளவும் வழிபிறக்கும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-04)

## அழுகிய....

பட்டு, கழுத்து வெட்டப்பட்டு அழுகிய நிலையில் இச்சடலம் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

இச்சடலத்தினைப் பொலிஸார் கல் முனை ஆதார வைத்தியசாலையில் ஒப் படைத்துள்ளனர். இது தொடர்பான விசா ரணைகளை நடத்துமாறு நீதிவான் உத்தர விட்டதாக சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (04)

## வெசாக்....

தினை கபளீகரம்செய்யும் நோக்குடனேயே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பா றைப் பகுதிகளில் புத்தரின் சிலைகள் இரவோடு இரவாக நாட்டப்படுகின்றன. அத னைத் தமிழ்பேசும் மக்கள் எதிர்க்கும் போது - கண்டிக்கும்போதும் அவர்கள் சிங்களவர்களால் தாக்கப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள், தமது நிலங்க ளிலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

முஸ்லிம் மக்களும், தமிழ்மக்களும் பெரும்பான்மையாக வாழும் தென்தமிழீழப் பகுதிகளில் பௌத்த சின்னங்கள் திடீரென முளைக்கின்றன. சிங்கள மக்களின் ஒரு வர்கூட இல்லாத தமிழ், முஸ்லிம் கிரா மங்களில் தெருவோரங்களில் புத்தர்சிலை களை வைக்கிறார்கள். இனச்சுத்திகரிப்பு முனைப்புப் பெறுகிறதா?

திருகோணமலையில் இதனைக் கண் டித்த தமிழரை தாக்கியவர்கள் யாழ்ப்பா ணத்தில் புதிய முகமூடியுடன் வெசாக் நிகழ்வுகளை பெரும் கொண்டாட்டமாகக் கொண்டாட இங்குள்ள தமிழர்களையும் அழைக்கின்றார்கள். நாம் பலியாவோமா!

திருகோணமலையில் கொல்லப்பட்ட தமிழனின் இரத்தம்காயும் முன்னே யாழ்ப் பாணத்தில் சமாதான வேசம்போடுகிறார் கள். தர்மத்தைப் போதிக்க நயவஞ்சக முகமூடி தரிக்கிறார்கள். இவர்களின் இந் தக் கொண்டாட்டங்களில் கலந்துகொள் பவர்கள் தம்மையே விற்கிறார்கள். சுயத்தை இழந்துவிடுகிறார்கள்.

இத்தகைய மோசமான நிலைக்கு எந் தச் சுயமரியாதையுள்ள தமிழனும் ஆட் படமாட்டான். கண்ணை விற்று சுகம்பெற முடியுமா!

வெசாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதை தமிழ்மக்கள் தவிர்த்துக் கொள்வதன்மூலம் தமது அபிலாஷைகளை கௌரவத்தை வெளிக்காட்டவேண்டும். இதுவே இன்றைய காலத்தின் மறுக்க முடியாத தேவையாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந)

# புலிகளை அங்கீகரித்து...

தாலும் மக்களின் மனநிலை மாறப்போவ தில்லை. தேசிய அரசு அமைப்பதனை சிங்கள மக்கள் எதிர்த்து நிற்கின்றனர். அத்துடன் பௌத்த குருமாரும் எதிர்க் கின்றார்கள். அவர்களின் ஆணையைமீறி எம்மால் எதுவும் செய்யமுடியாது.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கத் தையும், சரத்துக்களையும் நான் படிக்க வில்லை. பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதி எமக்கு விளக்கினார். உதவிக் காகக் காத்திருக்கும் மக்களுக்கு இந்தப் பொதுக்கட்டமைப்பு அவசியம் பேருதவி யாக இருக்கும்.

வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக் களுக்கு நேரடியாக உதவிகள் சென்ற டையப் பொதுக்கட்டமைப்பு உதவியாக இருக்கும். வடக்குக் கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருப்பதை நாம் நிராகரித்து விடமுடியாது.

பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்க ளுக்கு உதவிகள் சென்றடையவேண்டு மானால் விடுதலைப் புலிகளினூடான பொதுக்கட்டமைப்பு வழியாகத்தான் சாத் தியம். அதைத்தான் ஜனாதிபதி செய்து வருகிறார். அது நாட்டைத் துண்டாடுவது அல்ல.

இந்நாட்டின் இறையாண்மைக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற வகையில் ஜனாதிபதி தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார் என்று நான் நம்புகின்றேன்.

இந்நாட்டின் இறையாண்மைக்குப் பங் கம் ஏற்படுத்துகின்ற வகையில் ஜனாதி பதி தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

ஜனாதிபதி தெரிவித்த பொதுக் கட்ட மைப்பு நடைமுறைக்குவரும். அவ்வாறு நடைமுறைக்கு வராவிட்டாலும் மாற்றுவழி கள் மூலம் அம்மக்களுக்கு நிவாரண உதவிகள் நேரடியாகச் சென்றடைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### ஜனாதிபதி வேட்பாளர்

நான் ஜனாதிபதி வேட்பாளர் அல்ல. அவ்வாறு ஜனாதிபதி வேட்பாளராக நிய மிக்கப்பட்டால் பிரசாரம் செய்வதற்கு எனக்கு ஆறுமாதங்கள் போதும். இருந்தும் எனக்குப் பதவியாசை இல்லை.

ஜனாதிபதி வேட்பாளர் என்பது அது கட்சி எடுக்கவேண்டிய முடிவு. கட்சியின் மத்தியகுழு உரிய ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும். அதுவரை நாம் காத்திருக்க வேண்டும். யார் ஜனாதிபதி வேட்பாளர் என்பது குறித்து எனக்கு எதுவும் தெரி யாது.

நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனா திபதி முறையை ரத்துசெய்யமுடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது. அதற்கான பாராளுமன்றப் பலத்தை நாம் உருவாக்கிவருகிறோம். எமக்கு உரிய ஆதரவு கிடைத்தவுடன் நிறைவேற்று அதி காரம்கொண்ட ஜனாதிபதி முறை ரத்துச் செய்யப்படும். எதிர்க்கட்சிகள் எமக்கு ஆத ரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக் கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ற-4,6)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரியின் 5 ஆம் ஆண்டு நிறைவுவிழாவின் நான்காம்நாள் நிகழ்ச்சி நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

பேராசிரியர் அ.துரைராசா நினைவுப் பேருரையில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் 'பண்டைத்தமி ழரின் வானியற் கல்விச் சிந்தனைகள்' என்ற தலைப்பில் நினைவுபேருரை நிகழ்த் துவார். (து)

## சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவுக் கடற்கரையில் கரை யொதுங்கிய ஆணின் சடலம் இனங்காணும் பொருட்டு ஊர்காவற்துறை பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப் படைக்கப்பட்டுள்ளது.

முழு நீளக்கை வெள்ளைநிற சேட்டு டன் கீழ் உடுப்பு சேதமடைந்த நிலையில் காணப்படும் பிரஸ்தாப சடலத்தின் முகம் சிதைவடைந்த நிலையில் உள்ளதால் அடையாளம் காணமுடியாமல் இருப்பதாக பொலிஸர்ர் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை தமி ழகத்திலிருந்து வந்த படகில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த ஒருவரது சடலமாக இது இருக்கலாமெனவும் தெரிவிக்கப்படு கிறது. (ற)

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தென்கொரியா பயணம்

(கொழும்பு)

புதிய தசாப்தத்திற்கு ஏற்றவகையில் இராஜதந்திர முறையை மீண்டும் ஏற்படுத் துவதற்கான மாநாட்டின் ஆறாவது சுற்றில் கலந்துகொள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு தென்கொரியாவுக்குச் சென்றுள் ளார்.

தென்கொரியாவின் சியோல் நகரில் இன்று ஆரம்பமாகவுள்ள இந்த மாநாட்டில், ஆசிய, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா போன்ற நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்வார்கள். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் வியாழக்கிழமை உரையாற்ற வுள்ளார். (ந-4)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள்
பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
22.05.2005 முதல்
சிம்பு, திவ்யா நடித்த



மனோகரா யாழ்.
06.05.2005 முதல்
சரத்குமார், ரமேஷ், பூஜா மற்றும் பலர் நடித்த


கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.